ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக தைத் திங்கள் 1934௵ ஜனவரி௴—பிப்ரவரி௴	பரல் ௬

திருவாசகம்.

செஞ்சுடர்ச் சோதிபவளத் திரடிகழ் முத்தனைய
நஞ்சணிகண் டனல்லூ றுறை நம்பனைநா னொருநாள்
துஞ்சிடைக்கண்டு கனவின்றலைத் தொழுதேற் கவன்றன்
நெஞ்சிடை நின்றகலான் பலகாலமு நின்றனனே.

பதவுரை :—

செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் - சிவப்பு நிறமான தீயின்கண்ணுள்ள ஒளிபோல விளங்கும் பவளத் தொகுதியையும்;

திகழ் முத்து(த்திரள்)—ஒளி விளங்குகின்ற முத்துக்களின் தொகுதியையும்;

அனைய - போன்று விளங்கும் ;

நஞ்சணி கண்டன் - கடலினின்றெழுந்த ஆலகால நஞ்சைத் தரித்த கழுத்தை உடையவனும் ;

நல்லூர் உறை நம்பனை - திருநல்லூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய நண்பனுமாகிய சிவபெருமானை ;

ஒருநாள் - முன் ஒரு நாளில் ;

நான் துஞ்சிடைக் கனவின் தலைக்கண்டு கைதொழுதேன் - நான் உறங்கும்போது கனவினிடத்துக் கண்டு கைகளிரண்டையும் கூப்பி வணங்கினேன் ;

அவன் - (அவ்வாறு நான் வணங்கிய நாள் தொட்டு) சிவபெருமான் ;

நெஞ்சிடை நின்று அகலான் - எனது நெஞ்சை விட்டு நீங்காதவனும்;

பலகாலமும் - எப்பொழுதும் ;

நின்றனன் - நிலைபெற்று நிற்கின்றான்.
தோழீ ! இஃது என்ன வியப்பு என்பது குறிப்பெச்சம்.

விளக்கவுரை :—

இந்தப் பாட்டு ஒரு தலைவி தன் தலைவனைப்பற்றித் தோழிக்குக் கூறிய கூற்றாக அகப்பொருட்டுறையில் வைத்துப் பாடப்பட்டது. மயக்க அறிவு நீங்கித் தெள்ளிய அருள் அறிவு விளங்கப் பெற்ற அடியார்களுடைய தூய நெஞ்சில் சிவபெருமான் எப்பொழுதும் பேரொளியாய் விளங்குகின்றான் என்பது இப்பாட்டின் கருத்து. செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் - சுடர் என்பது இங்கே ஆகு பெயராய்ச் சுடரையுடைய தீயைக் குறிக்கிறது; சோதி - ஒளி. பவளத்திரள் - பல பவளங்கள் சேர்ந்த தொகுதி. பவளம் தீயைப்போல ஒளி விளங்கும் சிவந்த நிறமாயிருத்தலின் செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் என்றார்; திகழ்முத்து - திரள் என்ற சொல்லை முத்துக்கும் கூட்டுக. முத்துத்திரள்போல வெண்மை நிறம் சிவத்தினது தன்னியலுக்கும் பவளம்போலத் தூய சிவந்த நிறம்பொது இயலுக்கும் உவமைகளாகக் கூறியவாறும். வெண்மை என்பது எல்லா நிறங்களும் சேர்ந்த தன்றித் தனித்ததொரு நிறம் அன்று. வெண்ணிறமான பளிங்கானது தான் எந்த எந்த நிறப்பொருளைச் சாரினும் அந்த அந்த நிறப் பொருளாய்க் காட்டுதலன்றி அப்பொருள்களினது நிறம் யாதின்பாலும் தோயாதிருத்தல்போல சிவம் எந்த உயிர்ப் பொருளைச் சாரினும் தான் அதனைப் பற்றாது அதனைக் கடந்து மிக்காய் விளங்குதலை வெண்மை நிறம் குறிக்கிறது; பவளநிறம் போன்ற தூய சிவப்பு நிறம் தூய அன்பைக் குறிக்கிறது. சிவம் எல்லா உயிர்களுடனும் வேறறக் கலந்து அவ்வுயிர்களேயாய் அவ்வுயிர்களெல்லாம் தன்னைப் போற் பேரின்பம் அடைதல் வேண்டும் என்னும் பேரன்பை உடையவனாயிருத்தலைத் தூய சிவப்பு நிறம் குறிக்கிறது.

நம்பன் - நம்பன் என்ற சொல் நண்பன் என்பதன் மரூஉ; அன்பன். பகரத்துக்கு முன் ணகர வொற்றுக்குப் பதிலாக அதன் இன வெழுத்தாகிய மகரவொற்று வந்தது. வன்பு, வம்பு எனவும், மேன்பாடு, மேம்பாடு எனவும் வருதல் காண்க. தண்பு என்ற சொல் உலகவழக்கில் தம்பு என வருதலுங் காண்க. இன் - சாரியை. கனவின் தலை - தலை ஏழாம் வேற்றுமை யுருபு. கை தொழுதேற்கு - கைதொழுதேன் + கு. கு - சாரியை. பல்காலம் - பல்லாண்டு என்பது எக்காலத்தையும் குறித்தல்போல, பல காலம் என்பதும் எக்காலத்திலும் என்று பொருள் படும். நின்றனன் - இயல்புபற்றி அல்லது தெளிவுபற்றி நிகழ் காலத்தாற் கூறற்பாலது இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. இருள்

மல நிலைக்குக்கீழ் 32-வது பாட்டு "உள்ளத்தே நிற்றி யேனும் கள்ளத்தேநிற்றி" என்று கூறுதலாலும் அருள் நிலைக்குக் கீழ் 35, 37 பாட்டுகள் "(வந்து) புறம்பயம் நம்மூரென்று போயினரே" என்று கூறுதலானும், 38-வது பாட்டு "வெள்ளரோமென்று நின்றார்", என்று கூறுதலானும் அருளுரு நிலைக்குக்கீழ் 47-வது பாட்டு "புல்லிய மனத்துக் கோயில் புக்கனர்" என்று கூறுதலானும் அறியும் நெறிக்குக்கீழ் இந்த 53-வது பாட்டு "நெஞ்சிடை நிறைகலான் பல்காலமும் நின்றனனே" என்று கூறுதலாலும் விளங்குகிற வேற்றுமைக் கருத்துக்களின் அழகை நோக்குக. இவ்வேற்றுமைக் கருத்துக்கள் பல்வேறு நிலைகளிலுள்ள உயிரின் பக்குவங்களுக்கு ஏற்ற இறைவனது அருட்செயலைக் குறிக்கின்றன.

புத்தர் பிரான் பொருண்மொழிகள்

[பண்டிதர். திரு. அ. நடராச பிள்ளை அவர்கள்.]

7. அன்பனின் கடமைகள்

அன்பனே!

1. பொருள்கொடுத் துதவியுன் நண்பரைப் போற்று.
2. நேசரைப் புறத்தே நெஞ்சா ரப்புகழ்.
3. நண்பர்தம் நலனை நாடொறும் நாடு.
4. நேசரைத் தனக்கு நிகராய் நடத்து.
5. ஊதியத் தேயவர்க் கொருபங் கினைக்கொடு.

8. நண்பர்களின் கடமைகள்,

நண்பர்காள்!

1. அன்ப னுயிரை யருமையாய்ப் போற்றுமின்.
2. அன்பன் பொருளழி வுறாதே யகற்றுமின்.
3. இடுக்கட் படுங்கால் எதிர்வந்து காமின்,
4. அன்பனை வறுமையி லகலவொண் ணாது.
5. நண்பன் சுற்றம் நமதெனக் கொண்மின்.

சமயமும் தத்துவமும் :
Religion & Philosophy

சைவர் மகாநாடு

திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமையுரை

சென்ற டிசம்பர்த் திங்கள் இறுதியில் தஞ்சையில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 28-ம் ஆண்டு விழாவில் தலைமை வகித்த திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் நிகழ்த்திய தலைமை உரை :—

சமயம்

அன்பர்களே! மன்பதைகள் உய்ந்திடுதல் வேண்டிக் கடவுளருள் பெற்ற பேரறிவுடைய பெருமக்கள் கண்ட நெறியே சமயம் எனப்படுவது. ஆதலின் அது கடவுள் வகுத்தது எனலும் அமைவுடைத்தே. உலகிலே சமயம் என்பது இன்று நேற்று உண்டாயதன்று; பல்லாயிரம் ஆண்டுகளாகவே உளது. யாதானுமோர் ஒழுங்கிற் குட்பட் டொழுகும் மக்கள் வாழ்க்கை, என்று தொட்டுளதோ அன்று தொட்டே சமயம் என்பதும் உளதாம். சமயத் தொடர்பு சிறிதும் இல்லாத நாட்டினரையோ கூட்டத்தினரையோ நாம் ஒரு பொழுதும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இடத்தானும் காலத்தானும் பல்வேறு குழுவினராகப் பிரிந்த மக்களின் அறிவு செயல்களின் வேறுபாட்டிற்கேற்பவும், நெறி வகுத்தோர்களின் அறிவு அகக்காட்சிகளுக் கேற்பவும் சமயம் பலவாயின. எல்லாச் சமயங்களும் மக்கள் உயர்நிலை யடைய வேண்டு மென்னும் பெரு நோக்கமுடையனவே. அவை யாவற்றிற்கும் பொதுவான அறங்களும் ஒழுக்க நெறிகளும் உள்ளன. உலோகாயதம் தொடங்கிப் படிப்படியாக உயர்ந்துள்ள சமயங்கள் பலவும் பண்டைக்காலந் தொட்டே யுள்ளன. எந்தச் சமயத்தினரேனும் அந்தச் சமய நெறியில் ஒழுகுவரேல் மேன்மையுறுவது ஒருதலை. எனினும், சமயங்கள் யாவும் ஒருநிகரனவே என்றுதல் ஒரு பெற்றியுடைய பயன் விளைப்பன என்றுதல் கூறுதல் பொருந்தாது. ஒரு மொழியின்கண் நெடுங்கணக்கு முதல்

அறிவுநூல் இறுதியாக உள்ள அனைத்து நூலும் அம்மொழியாளர் பயிலுதற் குரியனவும், அவர்கட்கு இன்றியமையாதனவுமாம். எனினும், அறிவு நூல்களின் துறைபோகிய ஒருவன் மீட்டும் நெடுங் கணக்கும் சிற்றிலக்கியமும் பயிலுதல் அவமாதல் போல, முடிந்த உண்மைகளைக் கூறும் சமய நெறியுற்ருேன் ஒருவன் மீட்டும் கீழ்ப்படியிலுள்ள சமயங்களை நோக்கிச் சேறல் அவமே யாகும்.

சைவம்

திருநெறிச் செல்வர்காள்! உலகிலே பல்வேறு சமயங்களிருப்பினும் நாம் முதன்மையாகச் சைவத்தை ஆராயும் கடமைப் பாடுடையோம். சைவ சமயம் எப்பொழுது உண்டாயதெனக் காலவரை யறைக்குட் படுத்துரைக்க வியலாத அத்துணைப் பழமை யுடையதாக வுள்ளது. தமிழிலும் வடமொழியிலு முள்ள தொன்னூல்க ளெல்லாம் சைவத்தின் தொன்மைக்கும் முதன்மைக்கும் சான்று பகர்கின்றன. பண்டைத் தமிழ்ச்சங்கத்துச் சான்ருேர் பலரும் பல கடவுளரைக் கூற நேர்ந்த இடங்களிலெல்லாம் சிவபெருமானையே முதற்கண் வைத்துக் கூறுவாராயினர். அதுவே யன்றி இன்றியமையாக் கடவுள்தன்மையாகிய பிறப்பிறப்பின்மையைச் சிவபெருமானுக்கே உரியமையாக்கியும் கூறியுள்ளனர். சிலப்பதிகார ஆசிரியர் 'பிறவா யாக்கைப் பெரியோன்" என்றதனுல் பிறப்பின்மையும், சிவ சத்தியாகிய கொற்றவையைக் கூறுமிடத்தே, "விண்ணேர் அமுதுண்டுஞ் சாவர் ஒருவரும் உண்ணுத நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய்" எனச் சார்த்தி யுரைத்தமையால் இறப்பின்மையும் கறைமிடற் றிறைவர்க்கே உரியவாகக் குறித்தவாறு காண்க. இங்ஙனம் சிவபெருமானது முழுமுதன்மையைக் குறிப்பிடுஞ் சான்றுகள் மற்றும் எண்ணிறந்தன வுள்ளன. முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் பஃறுளியாறு கடல் கோட்படா திருந்த பழங்காலத்தில் விளங்கிய ஓர் தமிழ் வேந்தன். அவனைப் பாடிய புலவர் ஒருவர் 'முக்கட் செல்வர் கோயிலை வலஞ் செய்தற்கண் நின் குடை தாழ்க' எனப் பணித்தமையால் பல்லாயிரவாண்டுகளின் முன்பே சிவபிரானுக்குத் திருக்கோயிலிருந்த செய்தி வெளியாகின்றது. அகத்தியர், பதஞ்சலி, புலிக்காலர், உபமன்னியு, மார்க்கண்டர் முதலிய முனிவர்கள் சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற சீரடியார்களாவர்.

பண்டைக்காலத்து முனிவர்கள் பலருமே சிவ வழிபாடுடைய ரென்பதனை வியாச பாரதத்து அநுசாசன பருவம் முதலியவற்றால் அறியலாகும். மான்தோல், புலித்தோல், சடைமுடி முதலிய சிவ சின்னங்களுடைய ராகவே அவர்கள் கூறப்படுதலுங்காண்க. சுருங்கக் கூறுமிடத்து இமயமுதற் குமரிகாறும் பாதகண்ட முழுதும் பண்டை நாளில் விளங்கிய வேந்தர்களும் முனிவர்களும் ஏனை மாந்தர்களும் முழுமுதற் பொருளாகக்கொண்டு வழிபட்ட கடவுள் சிவபெருமானே; அவர்கள் ஒழுகிய நெறி சைவமே எனல் சாலும். அயல்நாடுகளிலும் சிவலிங்க வழிபாடு போல்வதொரு வழிபாடே இருந்ததென்பதற்கும் ஆதாரவுகள் உள்ளன. உண்மை இவ்வாறாகவும் சிலர் நடுநிலை திறம்பிச் சிவனையும் சைவத்தையும் இகழ்ந்து நிரயத்துக்காளா கின்றனரே எனப் பரிந்தன்றோ

"கூவ லாமை குரைகட லாமையைக்
கூவலோ டொக்கு மோகட லென்ப போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவதேவன் சிவன்பெருந் தன்மையே"

என்று திருநாவுக்கரசுகள் அருளியதூஉ மென்க.

சமய நூல்கள்

இனி, இங்ஙனம் பழம் பெருமை வாய்ந்த சைவ சமயத்தின் இயல்புகளை யெல்லாம் நமக்குத் தெளிய அறிவுறுத்தும் தமிழ் நூல்கள் திருமந்திரமும், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞான போதம் முதலிய மெய்கண்ட நூல்கள் பதினான்கு மாகும். பன்னிரு திருமுறையுள் திருமந்திர மொழிந்த முதற் பத்தும் இறைவனை வழுத்தும் துதிகளாகவும், பெரிய புராணம் திருத்தொண்டர்களின் வரலாறு கூறுவதாகவும் இருப்பினும், அவற்றுள்ளும் சைவ சமயத்தின் உண்மைகளே ஆண்டாண்டுப் பொதிந்து கிடக்கின்றன. எனவே, சைவர்கட்குப் பிரமாணமாக உள்ள நூல்கள் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சித்தாந்த நூல்களுமாம். இவையன்றித் திருக்குறள் என்னும் தமிழ் மறையும் சைவர்கட்குப் பிரமாண நூலே யாகு மென்க. வடமொழியிலுள்ள ஆரணவாகமங்கள் சைவமுதற் பிரமாணங்களேயாயினும் அவற்றின் ஞானகாண்டப் பொருளை மயக்கமற அறிவுறுத்துஞ் சிறப்பினாலும், சைவ சமயத்தை நிலைநாட்டிய பெருமையாலும், யாவரும் ஓதி உய்தி பெறுதற்குரிய எண்மையாலும், தமிழ் நூல்

களே முதன்மையாகப் போற்றற் குரியனவாம். சைவம் உலகில் இன்று நின்று நிலவுவதற்குத் திருஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் தோன்றித் திருப்பதிகங்கள் பாடிப் புறச் சமயங்களை வென்று சிவபிரான் முழுமுதன்மையை நிலைநாட்டினமையே காரணம் என்பதனை அன்று என்பார் யாவர்? இனி, இத்தகைய சைவ சமயத்தின் உண்மைகள் யாவை யென்னின், அவற்றை இங்கு யான் விரித்துரைக்கக் கருதிற்றிலேன்.

சைவ சமய உண்மை

"பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே,"

என்னும் திருமந்திரச் செய்யுள் சைவத்தின் கோட்பாடு இன்னதென்பதைச் சுருக்கமாக அறிவுறுத்துகின்றது. இங்கே விரிவுரை யாற்ற வந்திருக்கும் பெரியோர்கள் சைவத்தின் உண்மைகள் பலவற்றை விளங்க எடுத்துரைப்பார்களாதலின்; அவற்றைக் கேட்டுணர்ந்து பயனுறுவோமாக. சைவச் சார்புள்ள பொதுவகையான சில கருத்துக்களை மட்டும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சைவம் என்பது துவைதம் என்றும், சைவசித்தாந்திகள் துவைதிகள் என்றும், தாங்களே பழுத்த அத்துவைதிகள் என்றும் சிலர் கூறுவதுண்டு. சைவசித்தாந்த நூல்களில் யாண்டும் அது துவைதம் என்று கூறப்படவில்லை. 'அத்துவைதம்' என்னும் சொற்கு ஏனையோர் கொண்ட பொருள்களின் வேறாய தொரு மெய்ப்பொருள் கண்டமையினாலேயே சிவஞான போத ஆசிரியர்க்கு மெய்கண்டார் என்னும் திருப்பெயர் உளதாயிற்றென் பதனை

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ"

என்னும் தாயுமான வடிகள் திருவாக்கு விளக்குதலும் காண்க. சைவ சித்தாந்தத்தை அத்துவிதம் என்றலே அமையுமெனினும் விசிட்டாத்துவிதம் முதலியவற்றின் வேறுபாடு தோன்றச் சுத்தாத்துவிதம் என ஆன்றோர் வழங்குவாராயின ரென்க.

உலகிலுள்ள சமய வாதியரில் சிற்சிலர் கடவுள் அருவப் பொருளே யன்றி உருவப்பொரு ளன்றென்பர். அருவமும் உருவத்தின் நுண்மையே யென்பதனையும், விசும்பு போலும் சடப் பொருளும் அருவ மாதலின் அருவம் என்பதனாற் கடவுளுக்கு ஓர் ஏற்றமின் றென்பதனையும் அவர்கள் ஓர்ந்திடல் வேண்டும். அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்றுங் கடந்ததே கடவுளின் உண்மை நிலையென்றும், உயிர்கள்மேல் வைத்த கருணையால் அம் மூவகை வடிவையும் இறைவன் எடுத்தருள்வ னென்றும் சைவ சித்தாந்தம் கூறும். இறைவன் நினைத்த தொரு வடிவினை எடுத்துக் கொள்ள மாட்டாத குறைபா டுடையனல்ல னென்பதனையும், அதனால் அவன் இன்னவாறு வந்திடான் என்று அவனது பேராற்றலுக்கு இழுக்குண்டாகக் கூறுதல் தகவன் றென்பதனையும் உணர்தல் வேண்டும்.

உருவ வழிபாடு

இனி, சில சமயத்தினர் உருவ வழிபாடு கூடா தென்றும், அது தாழ்ந்த நிலையென்றும் கூறுவர். பிரமசமாசம் போன்ற கூட்டத்தினரும் அங்ஙனம் கூறுவர். மக்கட்கு உருவ வழிபாட்டினால் வரும் இழுக்கு இன்று என்பதனையும், அஃது இன்றி யமையாச் சிறப்பின தென்பதனையும் விளக்கலுறின் இம்முகவுரை விரிந்து விடுமகாலின் வாளாவிடுகின்றேன். ஆனால், உருவ வழிபாடு கொள்ளற்பாலதா, தள்ளற்பாலதா என நாம் புதுவதாக ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டியதில்லை யென்பதனை நம்மவர்கள் கருத்தில் வைக்க வேண்டும். இதனை மிக மிக வற்புறுத்தியவர்கள் நம்சமய குரவர்கள். மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையாராய், இறைவனால் வலிதின் விருப்பி ஆட்கொள்ளப் பெற்றோராய், அவனது எல்லையில்லாத பேரருளைப் பெற்று யாவர்களும் செய்ய வொண்ணாத செயல்களைச் செய்தோராய் விளங்கி நமது சமயத்தை நிலைநாட்டிய அருட்குரவர்கள் தங்கள் பதிகங்களால் உருவ வழிபாட்டை வற்புறுத்தி யதனோடு அமையாது தாங்களும் பதிகள் தோறுஞ் சென்று வழிபாடுசெய்து போந்தன ரென்றால், அவர்கள் காட்டிய வழியே நாம் உய்யும் நெறியாகக் கடைப்பிடித்து ஒழுகலே நமது கடமையாம். அது தாழ்ந்த நிலையென்று நினைப்பது அறியாமையே யாம்.

(தொடரும்)

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

(வித்வான் T. P. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M.A., B.L.,)

(முன் உாஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

கதைக்குக் கால்:—மூர்த்திநாயனுர் வரலாற்றைப் புனைந் துரைக்கப் புகுந்த சேக்கிழார் முதலில் அவர் வாழ்ந்த பாண்டி நாட்டையும் மதுரையினையும் புனைந்துரைக்கின்றுர். மூர்த்திநாயனு ருடைய வாழ்க்கைப் போக்கிலே எந்த உயரிய உண்மைகள் விளங்குகின்றனவோ, அந்த உண்மைகளனைத்தும் தமிழ் நாட்டின் தனிப்பெருஞ் சிறப்பியல்புகளாக விளங்குவதைச் சுட்டி அத்தகை யார் பிறந்து வளர்ந்து வாழத்தக்க நாடு அந்த நாடே எனக் குறிக் கின்றுர். அந்த உயரிய கொள்கைகள் மறைந்தொழிந்து போகிற நிலையிலே அப்பெரியாரைத் தோற்றுவித்து அந்நாடு நிலைகுலையாத படி செய்விக்கின்ற புதுமையை நாம் உற்றுநோக்குதல் வேண்டும். அந்த உயரிய கொள்கைகளுக்கு மாறுபட்ட கொள்கைகளை அம ணர்களில் ஒருசிலர் உயிரெனப் போற்றி உலகத்திலே பரப்பி வந்தனர். அவர்களை வென்றே மூர்த்திநாயனுர் அரசர் ஆகின்றுர். அவர்களது கொள்கைகள் அந்நாட்டிற்கே முற்றும் முரண்பட் டவை என்பது தோன்ற அந்நாட்டைப் புகழ்ந்துரைப்பது பாராட் டத்தக்கதாம். மூர்த்திநாயனுர் பிறந்த நாடும், காலமும், நாயனு ரோடு ஒருங்கு பிணைந்து விளங்குவதனைச் சேக்கிழார் அழகாகப் புனைந்துரைக்கின்றுர். நாயனுரே உலகத்திற் கொரு வழிகாட்டி யாகும்போது அக்காலமும் அந்நாடும் கடவுள்வழி நின்று அவ ருக்குப் பணி செய்யவேண்டாவா? அவையே இவ் வரலாற்றுக்குக் கால்களாக நின்று தாங்குகின்றன எனலாம்.

அமணக்கோள்கை:—நாயனுர் தமிழ்நாட்டி னியல்புக்கு ஒரு சிறிதும் பொருந்தாத அமணக்கொள்கைகளை வேறக் களைந்து சிவக்கொள்கையை நிலைநாட்டினுர். ஒருவகையால் நோக்கு மிடத்து அவ்வமணக் கொள்கைகள் உண்மையான அமணக் கொள்கைகளே அல்ல; போலி யமணக் கொள்கைகளேயாம். அமணர்களது கொள்கைகளிற் சிலவற்றையே சிவனடியார்கள் மறுத்துரையாடுகின்றனர். நமது தமிழ்நாட்டிற் பரவிய சமணர் கள் அரசாங்கத்தையே கைப்பற்றித் தமது கொள்கையைப் பரப்ப முயன்றனர் என்பதே சிவனடியார்களுடைய முறையீடு.

"அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்ற பழமொழியின் நுட்பத்தை நன்குணர்ந்தவர்கள் அமணர்களேயாம். அவர்கள் உடையிலாதவர், வெள்ளுடையார் என்ற இரு பிரிவினரில் உடையிலாத பிரிவைச் சேர்ந்தவர்கள். கட்டுந் துணியும் ஒரு கட்டேயாதலால் அந்தக் கட்டும் அறப் பெறுதல் வேண்டுமென எண்ணினர். உடம்பும் மிகையாதலின் பட்டினி கிடந்து இறக்கும் வழியாலேனும் அதனை ஒழித்துக்கொள்வதே மேலென எண்ணி அங்ஙனமே உயிர் துறந்தோர் பலர். இசைப்பாட்டு முதலியன காதலைத் தூண்டுவன என்று கொண்டு அவற்றைப் பழித்தனர் பலர். "வீணைச்செல்வம்" என்பது காதலுக்குப் போயிற்று.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலு
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

என்றபடி இயற்கையழகைக் கண்டு பேரின்ப மடையாது பூமாலையைக்கண்டு பூண்டு மகிழாது பாம்பென அஞ்சிப் பதைபதைப் பாரைப்போல வருந்தியுழன்றனர். துணியை நீத்து உலவுதல் பெண்களுக்குக் கூடா வொழுக்கமாய் முடிதலின், அவர்களுக்கு அப்பிறவியில் வீடு பேறில்லை என்றனர். பெண்களைத் துறப்பதே பெருந் துறவு என்றனர். பொன்னைத் தொடவும் மனம் புழுங்கினர். சிவனடியார்கள் இவர்களுக் கெதிரிடையாக அன்பே சிவம்; உலகமே தாய் என வற்புறுத்திப் பெண்ணை அருளம்மையின் வடிவமாக்கி வழிபட்டு வந்தனர். இசைப் பாட்டினாலேயே மன மொருமுகப்பட்டு மாசகன்று உயர்நிலை யடையும் என்றனர். அகப் பொருளாராய்ச்சியே அன்பாராய்ச்சி என வற்புறுத்தினர். பெண்களும் வாழ்க்கைத் துணையாகி வீட்டிற்கும் வழிகாட்டுவர் என விளக்கி வைத்தனர். திருத்தக்க தேவர் முதலியோர் பாவாணர்களாதலின் அவ்வகையில் அவர்கள் தம்மையும் மறந்து சிவக் கொள்கையாம் தமிழ்க் கொள்கைகளை வற்புறுத்துகின்றார்கள் எனலாம். இந்நுட்பம் அறியாதார் திருத்தக்க தேவரைத் துறவியோ எனவும் அவர் நாளிலேயே ஐயுற்றார்களன்றோ?

தமிழ் நாட்டின் இயல்பு:—சிவக் கொள்கைகள் இயற்கையாகப் பரவி யிருந்த தமிழ் நாட்டிலே யல்லவா அமணக்

கொள்கை பரவத் தொடங்கியது என்பதுபட நாட்டைப் புனைந் துரைக்கின்றார் சேக்கிழார். பெண்களையும், இயலிசையினை யாரா யும் புலவர் பெருமக்களின் கழகத்தினையும், அகப்பொருள் நூலின் நுட்பத்தினையும், ஒருங்கியைய வைத்துத் தமிழ் நாட்டைப் புனைந்துரைக்கின்றார். அவையே தமிழ் நாட்டின் இயற்கை யழகு எனக் காட்டுகின்றார். மணி விளக் கொன்று விளங்கித் திகழ்கின் றது; அதன் இயல்பைக் கெடுக்க அதனை மூடி வைப்பாரை எவ் வாறு வெறுப்போமோ அவ்வாறே தமிழ் நாட்டின் இவ்வழகைக் கெடுப்பாரையும் வெறுப்போம் அன்றோ? மற்றோர் நுட்பமும் இங்கு உண்டு. மூர்த்திநாயனார் நிலைநாட்டிய உண்மைகள் புதியன வல்ல; தமிழ் நாட்டின் இயல்பாக விளங்கும் மிகப் பழைய கொள்கைகளேயாம் என்பதாயிற்று. பழைய காலைத் தூர்த்துப் புதுக்காலை வெட்டி விட்டாரல்லர்; தூர் வார்தலே அவர் செய்தனர் என்பதாயிற்று.

புகழ்ப் போர்வை:—

சீர் மன்னு செல்வக்குடி மல்கு சிறப்பினோங்கும்
கார் மன்னு சென்னிக் கதிர்மாமணி மாடவைப்பு
நார் மன்னு சிந்தைப் பல நல்துறைமாந்தர் போற்றும்
பார் மன்னு தொன்மைப் புகழ் பூண்டது பாண்டி நாடு.

என்று பாண்டிநாட்டைப் புகழத் தொடங்குகின்றார் சேக்கிழார். நத்தப்பாழான நாடோ அது? மக்கள் நிறைந்தநாடு. நாட்டின் பெருமையனைத்தும் அந்நாட்டின் மக்களையன்றோ பொறுத்திருக் கிறது? "எவ்வழியாடவர் நல்லவர் அவ்வழி நீயும் நல்லை" என்று நாட்டினை விளித்து அவ்வையார் கூறுவது காண்க. குடிமல்கு சிறப்பே நாட்டிற்குச் சிறப்பாகும்; அந்நாட்டுக் குடிகளோ செல் வத்திற் சிறந்தவர்கள்; செல்வக்குடிகள். அந்தச் செல்வமும் இன்று நேற்றுவந்த செல்வம் அன்று. நிலைபேறு பெற்று மன்னிய செல்வ மாகும். களவாலும் காவாலும் வந்த செல்வமன்று அஃது. நேரிய வழியால் வந்ததாதலின் சீரியதாய்த் திகழும் செல்வமாகும். அவர் கள் வாழும் வீடுகளோ, அவர்கள் 'ஓ' என ஓங்கி வாழ்வது போல, ஓங்கிவளர்ந்து வானையளாவி மழைமுகிலை மணிமுடியாக்கக் கவித்து நிற்கின்றன. அன்பின் குளிர்ச்சியைச் சுட்டுவார், முன்னரே மழைக் குளிர்ச்சியைக் குறிப்பாகக் காட்டுகிறார். ஒளி நிறைந்த

பெரிய மணிகள் இழைத்த வீடுகளே எங்கும் உள்ளன. அவை இவ்வாறு ஓங்கியும் ஒளிர்ந்தும் இருப்பதாலே அதிலே வாழ்வோர்க்கு ஒரு சிறப்பும் இல்லை. அதில் வாழ்வோர் மிகச் சீரியராதலின் அவர்களாலேயே அவ்வீடுகளும் சிறப்படைகின்றன. மேலோர் வாழ்தலே வீட்டிற்கு அழகு. மற்றைய வளனெல்லாம் இதை நோக்கியே சிறப்புறுகின்றன. இத்தகைய சீரிய மாந்தரின் சிறப்பும் முடிவடைந்து விடவில்லை; ஒரேநிலையில் தேங்கிப் புழுத்துப் போகவில்லை. நாளுக்குநாள் முன்னுக்குவந்து ஓங்கிக்கொண்டே போகின்றது. அத்தகையார் வாழும் அத்தகைய நாட்டைப் புகழாதார் யார்? புகழ்வது மட்டுமா? கடவுள் நாடு எனக் கொண்டு போற்றுகின்றார்கள் அல்லவா? தொலைவி லிருப்பார்க்கும் புகழொளி பரப்பிக் காட்சி தருவதாகப் பாண்டி நாட்டைக் காண்கிறார் சேக்கிழார்.

(தொடரும்)

தேவார வைப்புத் தலங்கள்

பேரூர் :—இதனை மேலைச் சிதம்பரம் என்பர். அப்பரும் சுந்தரரும் பாடிய திருத்தலம். கோயமுத்தூர் புகைவண்டி நிலையத்திலிருந்து மூன்றுகல் தொலைவிலுள்ளது. திருக்கோவில்கொண்டுள்ள சிவபெருமான் குளப்படிச் சுவடும் கோட்டுச்சுவடும் உடையவர். இத்தலத்திலோடும் நொய்யலாறு கலிகன்மநாசினி என்று வடமொழியிற் கூறப்படும்.

நல்லக்குடி :—இஃது குயிலாலந்துறை எனப் பெயர்பெறும்; மாயூரத்திற்கு ஒருகல் தொலைவிலுள்ளது; அப்பர் பாடப்பெற்றது.

கஞ்சாறு :—இஃது ஆனந்தத் தாண்டவபுரம், ஆனைதாண்டவபுரம் என வழங்குவது. "உஞ்சேனை மாகாளம்" என்னும் பதிகத்தில் திருநாவுக்கரசு அடிகளாற் குறிக்கப்பட்டது. மானக்கஞ்சாற நாயனர் தோன்றிய திருப்பதி. பாரத்துவாசாசிரமும், பாரிசாதவனமுமாம்.

கருந்திட்டைக்குடி :—கருந்தட்டாங்குடி என வழங்குவது. தஞ்சாவூர் நிலையத்தில் இறங்கிச் செல்லற்பாலது.

—கா. சிவ. க.

இலக்கணமும் இலக்கியமும்
Language & Literature

தமிழகம்

[திரு. S. நடராஜன் அவர்கள் B. A.]

(முன் உகக-ம் பக்கத் தொடர்ச்சி)

16. ஸ்காட் எலியெட்: ஸ்காட் எலியெட் (Scott Elliot)† என்னும் நிலநூல்வல்லார் தம்முடைய "இழந்த லெமூரியா" என்னும் நூலில், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள பாறைகள் மிகப் பழைமையான காலத்தில் உண்டானவை யென்றும் ஒரு பெரிய மலைத்தொடர் இந்தியாவின் மேற்கரையிலிருந்து தெற்கே சென்று மேற்கும் கிழக்குமாக இருந்ததென்றும் கருதுகின்றார். இவர் இவ்வுலகில் ஐந்து கடற்பெருவெள்ளங்கள் நிகழ்ந்துள்ளன எனவும், லெமூரியா இருமுறை கடற் கோட்பட்டதெனவும் கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்களிலும் இருகடற் கோள்கள் கூறப்படுகின்றன. இவர் கூறும் பெரு வெள்ளங்களும் நம் தமிழ்நாட்டுப் பண்டை நூல்களிற் கூறப்படும் ஊழி முடிவுகளோடு ஒப்பிட்டு நோக்கத் தக்கன.

17. ஹெக்கல்: ஹெக்கல் என்னும் ஜெர்மானியப் புலவர் குமரி முனைக்குத் தெற்கேயுள்ள ஞாலத்தின் நடுக்கோட்டிற்கு

---

† "All the Mountain chains such as the Alps, Pyrenees, Carpathians and Himalayas into the composition of whose central and loftiest parts the nummulitic Strata enter bodily could have had no existence till after the Middle Eocene period. During that period the sea prevailed where these chains now arise, for nummulites and their accompanying testacea were unquestionably inhabitants of salt water".

"In the south of India also at Pondicherry, Virdachellem and Trichinopoly, Messrs. Kayee and Egerton have collected fossils, cretaceous system."

Manual of Elementary Geology.

By Sir Charles Lyell, M.A., F.R.S.

Cretaceous system is older than the Eocene period.

இருமருங்குமிருந்த நிலப் பகுதிகளே, மக்கள் வாழ்விற்குத் தக்க நிலையை முதற்கண் அடைந்தன வென்றும், அவண் மக்கள் முதற்கண் தோன்றி நாகரிகத்துக்கு வித்திட்டனர் எனவும் கூறியுள்ளார். இவர் சந்தாதீவுகள்முதல் ஆசியாக்கண்ட எல்லையோடு ஆப்பிரிக்கா வரை ஓர் நிலப்பகுதி இருந்ததென்றும் கூறுகிறார்.

18. மேஅக்லீன்: டாக்டர் C. மெஅக்லீன் என்பார் தனது சென்னை ராஜதானி அட்மினிஸ்டிரேஷன் மானுபலில் "பௌதிக சாஸ்திரமும் காதுப் பொருள்களின் சரிதையும் மானிட அறிவுக்கு உட்பட்ட ஒரு காலத்தில் தென்னிந்தியா ஆசியாவோடு சேர்ந்த நாடு அல்லவென்று தெளிவுபடுத்துவதாய் எழுதியிருக்கிறார்."*

19. எனவே, மக்கள் தோன்றிய பின்னர் எத்தனையோ மாறுபாடுகள் கடலிலும் நிலத்திலும் ஏற்பட்டன வென்பதும், கடற்பெரு வெள்ளங்கள் குமரி முனைக்குத் தெற்கேயுள்ள தமிழ் நாடுகளைக் கொள்ளைகொண்ட தென்பதும், தென்னிந்தியா பண்டைத் தமிழகத்தின் எஞ்சிய பாகமென்பதும், வடக்கே பல நாடுகள் நீரினுள்ளிருந்து வெளிப் போந்தன வென்பதும் வெளிப்படை.

தமிழகம் குறுகினமை

20. மக்களினந் தோன்றி முதல் முதல் நாகரிகத்திற்கு வித்திட்ட பழம் பகுதியாகிய குமரிக்கண்ட முழுவதிலும் வதிந்து வந்த தமிழர், தற்காலம் தென்னிந்தியாவில் வசித்துவரும் வரலாற்றைக் கூறுவாம்.

நாகரிக வளர்ச்சிமுறை

21. உலகில் மக்கட் டோன்றி சில காலம் கழிந்தபின்னரே பேச்சு உண்டாயிருத்தல் வேண்டும். "மக்கள் தோன்றி இரண்டு லக்ஷம் வருஷம் மிருகங்களோடு திரிந்தும், பிறகு 30,000 வருஷ காலமாக மீன்பிடித்துத்தின்று காலங்கழித்தும், பிறகு கிழங்கு காய்கனிகளைத் தின்றும், வேளாண்மை, கல்வி, கடவுள் நம்பிக்கை முதலானவைகளற்று, கேவலம் நிர்வாண பிராணிகளாகத் திரிந்ததாகவும், இப்படி அநேக ஆயிரம் வருடங்கள் ஆனபிறகு மழை வெயிலுக்குத்தங்க, பாக்கிளைகளில் கேவலமான குடிசைகளைக் கட்டிக்கொண்டும், குளிருக்காக மரப்பட்டை நார் கொடிகளைப் போர்வைகளாகவும், ஆகாரத்திற்காக அடிக்கடி அநேக இடங்களில்

* செந்தமிழ் தொகுதி. 12, பக்கம் 152.

போய் அலேந்து நொந்து முடியாமல் நீர்வளம் நில வளமுள்ள ஓர் இடத்தில் தங்கி, காய்கனி, பயிர் பச்சைகளைப் பயிர்செய்து குடியானவர்களாகிவிட்டார்கள் என பூதத்துவ சாஸ்திரிகள் சொல்லியிருக்கின்றனர் * "

காலம்

22. சரித்திரக்காரர்கள், காலத்தை (Pre-Historic) சரித்திரத்திற்கு முற்பட்ட காலம், (Historic-Ancients) சரித்திராரம்பப் பண்டைக்காலம், (Middle Ages) மத்திய காலம், (Modern Times) நிகழ்காலம் எனப் பிரித்திருக்கின்றனர். மக்களின் நாகரிக வளர்ச்சியை, பழங்கற் காலம், புதுக்கற்காலம் செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் என அவ்வப்போது அவர்கள் வழங்கிய கருவிகள் செய்யப் பயன்பட்ட நிலக் கனிகளை வைத்து வரையறுப்பர். ஸ்காட் எலியெட் என்பார் உலகத்திற்கு இற்றைவரை நேர்ந்துள்ள பிரளயங்களில் முதன்மையானது சுமார் 11,00,000 ஆண்டுகளுக்கு முன்னர் எனவும், இரண்டாவது வெள்ளம் சுமார் 8,00,000 ஆண்டுகளுக்கு முன்னர் எனவும், மூன்ருவது வெள்ளம், 2,00,000 ஆண்டுகளுக்கு முன்னர் எனவும், நான்காவது வெள்ளம் 80,000 ஆண்டுகட்கு முன்னர் எனவும், ஐந்தாவதுவெள்ளம் 9500 ஆண்டுகட்குமுன்னர் எனவும் கூறுகிருர். இரண்டாவது வெள்ளத்திற்குப் பின்னர்தான் மக்கள் பேச்சுக் கற்ற காலமும் பழங்கற் காலமுமாக இருக்கலாம். நடுக்கோட்டுப் பகுதியில் தோன்றிய மக்கள் பிற்காலத்தில் தங்கள் நாடு கடல்வாய்ப் படுவதைக் கண்டு வடக்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் சென்றிருத்தல் வேண்டும். (தொடரும்)

தமிழ்மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

(முன் உகசு-ம் பக்கத் தொடர்ச்சி)

நகுதல் என்னுஞ் சொல்லில் 'கு' என்னு மெழுத்திற்குள்ள ஒலி 'ஹு' என்னு மெழுத்தால் குறிக்கப்பட்டது.

எனவே மேற்கூறிய சொற்களை 'பஸித்தல்' எனவும் 'நஹுதல்' எனவும் எழுத ஒலியுங் குறியு மொத்து இயங்கும்.

---

*Hindu Holy Bible.

இவ்விரண்டோசைகளும் இவ்வாறுழிய, இன்னும் 7 ஓசைகள் ஏற்ற குறிகளின்றி நிகழ்கின்றன. அவையாவன :—'பங்கம்' (ga) 'பஞ்சம்' (ja) 'பண்டம்' (da) 'பந்தம்' (tha voiced as in this) 'கம்பம்' (ba) 'கன்று' (ru nasal) 'செய்பவன்' (soft ப).

எனவே இவ்வேழு ஒலிகளுக்கும் ஏற்ற குறிகள் வேண்டும்.

நம் நாட்டில் ஆங்கிலமொழி பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப் படுவதாலும், இம்மொழி கற்ற நம்மவர் அம்மொழியின் சொற்களை வரம்பின்றித் தழுவுவதாலும், ஆங்கிலங் கற்காதவரிடமும் பல ஆங்கிலமொழிகள் சாதாரணமாக வழங்குகின்றன. அன்றியும் தொழிற்சாலை, பண்டகசாலை, நீதிமன்றம் முதலிய பல துறைகளிலும் இம்மொழியின் பல சொற்கள் இன்றியமையாததாயின. "கடிசொலில்லை காலத்துப்படினே" என்னும் விதிக்கேற்கத் தற்காலத்தில் சாதாரணமாக வழங்கும் ஆங்கில மொழிகளை நாம் ஏற்றுக்கொள்வது தகுதியே. மேலும் நம் நாட்டார், இக்காலத் தியங்கும் மிக விரிவான பல சாத்திரங்களைக் கற்றுணர்ந்து மேன்மைப் பட வேண்டுமெனில் ஆங்கிலச் சொற்கள் பலவற்றை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியமே. இவ்வகைச் சொற்களை ஏற்று இச்சாத்திரங்களைத் தமிழில் எழுதினாலன்றி இச்சாத்திரங்களின் ஞானம் (scientific knowledge) நம் மக்களிடையே எளிதில் பரவாது. இன்னும் பல காரணங்களுளவெனினும் இக்கட்டுரைக்கு இவையே போதும்.

ஆகையால் இம்மொழிச் சொற்களை நாம் ஏற்று அச்சொற்களின் ஒலிகளைக் குறிக்கத்தக்க குறிகள் தமிழில் இல்லையெனில், நாம் புதிதாகக் குறிப்புகளைப் புகுத்து அச்சொற்களை ஆங்கிலேயர் மொழிவது போலவே நாமும் மொழிவது சிறந்ததாகும். எனவே, அம்மொழியின் உயிரொலிக்கேற்ற உயிரொலிகளும் அவ்வொலிகளைக் குறிக்க எழுத்துக்களும் நம் மொழியில் உளவென முன்பே காட்டியுள்ளேன். இனி ஆங்கில மெய்யெழுத்துக்களின் ஓசைகளுக்கு ஏற்ற தமிழ் ஓசைகளும் குறிகளும் உளவோ என ஆராய்வோம்.

ஆங்கில அரிச்சுவடியில் 21 மெய்யெழுத்துக்களே யுள்ளன. அவைகளில் c, j, q, x and y என்னு மைந்தெழுத்துகளும் மிகைபட்ட வெழுத்துக்களென முன்னம் எடுத்துக்காட்டினேன். எனவே இவைகளைத் தவிர்ப்பின் 16 எழுத்துக்கள் மிஞ்சும். இவற்றுடன் தகுந்த குறியின்றி நிகழும் 6 ஒலிகளையும் கூட்ட ஆங்கிலத்

இல் 22 மெய்யொலிகள் நிகழ்கின்றனவாம். (ஆங்கிலமெய் யெழுத்துகளை (English Consonants) முன்னால் விரித்துரைத்த போது இவ்வொலிகளை 17 முதல் 22 வரையிலுள்ள இலக்கங்களால் காட்டப்பட்டிருக்கிறது.)

ஆங்கில மெய்களினொலிகளைக் குறிக்கும் எழுத்துகள்.	அவ்வொலிகளுக்கேற்ற தமிழ் மெய்கள்.	குறிப்பு.
B	இல்லை	
D	,,	டகரத்தின் மெல்லோசை
F	,,	வகரத்தின் வேற்றோசை
G	,,	ககரத்தின் மெல்லோசை
H	,,	கண்டத்தியங்கும் காற்று
J	,,	வடமொழி ஜ்
K	க்	
L	ல்	
M	ம்	
N	ந்	
P	ப்	
R	ர்	
S	இல்லை	வடமொழி ஸ்
T	ட்	
V	வ்	
W	இல்லை	பின்னால் விவரிக்கப்படும்
Z	,,	சகரத்தின் மெல்லோசை
P	த்	
D	இல்லை	தகரத்தின் மெல்லோசை
SH	இல்லை	வடமொழி ஷ்
Y	,,	ழகரத்தின் வேற்றோசை
J	ய்	
N	ங்	

மேற்கூறிய அட்டவணையிலிருந்து H, S, F, என்னும் மெய்யொலிகள் முறையே கண்டத்திலும், இடைநா இடையண்ணத்திடையும், மேற் பல் கீழிதழிடையிலும் வெளிவரும் காற்றேயாம்.

ஆகவே இவைகள் ஒலிகளின் விதியைத் தழுவாததால் தமிழ்மொழி முன்காலத்தில் இவைகளை ஏற்கவில்லை. எனினும் அவைகளை ஓசை எனக்கருதி H, S, என்னும் எழுத்தோசைகளை வடமொழிச் சொற்களையேற்ற பொழுதே ஹ, ஸ என்னும் எழுத்துக்களைப் புகுத்ததால் அவ்வொலிகளுக்கேற்ற குறிகள் உண்டாகிவிட்டன.

F ஒன்னும் ஒலி வகாத்தைப் போலவே மேற்பற் கீழிதழ் இயக்கத்தால் பிறப்பதாகையால் அவ்வொலியின் வேற்றொலியா கக்கருதி ஓர் குறியமைக்க வேண்டும்.

B, D, G, Z, Q, என்னும் ஒலிகள் வல்லெழுத்துகளின் மெல்லோசைகளெனவும் அவ்வோசைகளைக் குறிக்கத்தக்க குறிக ளில்லையெனவு மெடுத்துரைத்தேன்.

SH இக்குறியினோசை ஷகரத்தால் தமிழில் முன்னமேயே தழுவப்பட்டிருக்கிறது.

W, Y என்னும் எழுத்துக்கள் (Semi vowels) அரை உயி ரென முன்ன முரைக்கப்பட்டது. இவைக்கேற்ற தமிழ் எழுத் துக்கள் முறையே வகர யகரங்களாம். இம் மெய்களைத் தமிழில் 'உடம்படு' மெய்களெனப் பெயரிடப்பட்டிருக்கிறது. உடம்படு என்பதை உடன்படு எனப்பிரித்து பொருள்களின் ஈரெழுத்துக் களை இணைத்தொலிக்க உடன் படுத்தும் மெய்களென்றேற்படும். இதுஎவ்வாறெனின், அவனை + அடித்தான் என்னும் சொற்களில் நிலைமொழி ஈற்றுயிராகிய ஐகாரத்தையும் வருமொழி முதலுயிரா கிய அகரத்தையும் இணைத்தொலிக்க வேண்டுமாயின் யகர ஒற்று இடையே புகவேண்டும். இவ்வாறு வகுப்பின் அவனை + ய் + அடித்தான் என நின்று, நிலைமொழியீற்றின் ஐகாரம் முன்பே 'ன்' என்னும் மெய்யுடன் புணர்ந்திருப்பதால் அப்புணர்ச்சி மாறுமல் அவ்வாறே நிற்க, நடுவே புகுத்தப்பட்ட யகர ஒற்று வருமொழி முதலில் தனியாயியங்கும் அகர உயிரோடு புணர்ந்து, யகரமாய், முற்கூறிய சொற்களிரண்டையும் 'அவனையடித்தான்' எனப் பிணைத்து மொழிய இடங்கொடுத்தது. எனவே இப்புணர்ச்சிக்கு உடன்பட்ட யகர ஒற்றை உடம்படு மெய்யெனக் கூறுதல் தகு தியே.

(தொடரும்)

ஆராய்ச்சிப் பகுதி-Research

சோழர்கள் கல்வெட்டுகளிற் கண்ட குறிப்புக்கள்

[இராவ்சாஹிப் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

(முன் உஉ௰-ம் பக்கத் தொடர்ச்சி)

IV. மன்னர்களின் விருதுகள்.

சோழன் வீரராஜேந்திர தேவன் ஆகவமல்லனைப் போரில் வென்றபோது அவனுடைய விருதுகளை எல்லாம் கவர்ந்து கொண்டு வந்ததாகச் சாசனம் கூறுகிறது. அவ்விதம் கவர்ந்து கொண்ட விருதுகள் அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளன:—

"நண்ணிய ஆகவமன்னனும் அவர்க்கு முன்னேட தன் வேக வெங்களிற்றினை விலக்கி வாகை கொண்டு அங்கு அவர் தாரமும் அவர் குலதனமும் சங்கும் முன்தொங்கலும் தாரையும் பேரியும் மேகடம்பமும் வெண்சாமரையும் காக்கைக் கொடியும் மகர தோரணமும் புட்பகப்பிடியும் போர்க்களிற் றீட்டமும் பாய் பரித்துறைகளும் பறித்து செய்யொளிர் விஜயமணி மகுடம் மிசை யொடும்'' என்ற அடிகளில் அரசர்கள் கொண்ட விருதுகளை வரிசையாக குறித்திருக்கின்றனர். அவற்றில்:—

1. தாரம் என்பது பெண்சாதி அல்லது மனைவி. அக்காலத்தில் பெண்டிரை யுத்தங்களில் சிறைப்படுத்துதலும் உண்டு எனத் தெரிய வருகிறது.

2. குலதனம் — பூர்வீகமாக வம்ச வழிவந்த பொருள்.

3. சங்கு—அரசர்கள் தாம் புறப்படும்போது பராக் சொல்லி ஊதும்படியான சங்கு.

4. முன் தொங்கல் — அரசர்க்கு மேல் அழகாகத் தொங்க விடும் குஞ்சங்கள்.

5. தாரை — அரசன் வருவதை ஒலித்துக் காட்டும் பறை*

6. பேரி — பெரிய நகாரா.

---

*தாரை யென்பது ஊதுங்கருவியே யாதல் வேண்டும். தாரை, பேய்த்தாரை, வங்கா என வழக்காற்றில் உள்ளமை காண்க (ப-ர்)

7. மேகடம்பம் — அரசனுக்கு மேலே அலங்காரமாக நிறுத்தும் விதானம் அல்லது மேற்கட்டி.

8. வெண்சாமரை — வெள்ளை மயிரினால் செய்யப்படும் சாமரை.

9. காக்கைக்கொடி — இதனைச் சூகரக்கொடி என்பதுதான் சரியானதாம். காட்டுப்பன்றி அல்லது வராக உருவம் கொண்ட கொடி என்று பொருள். இது ஆகவ மன்னனின் கொடி.

10. மகர தோரணம் — அரசர்கள் பவனி வரும்போது முன்னால் கொண்டு செல்லும் அலங்கார தோரணம்.

11. புட்பகப்பிடி — பெண் யானை.

12. போர்க்களிறு — போரில் செல்லும் யானை.

13. பாய்பரித் துறை — குதித்துத்தாவும் குதிரைகள்.

14. செய்யொளிர் விஜயமணி மகுடம் — சிவந்த ஒளிவீசும் படியானதும், வெற்றியைத் தரும்படியானதும், இரத்தினங்கள் பொதிந்ததுமான கிரீடம்.

மேற் சொல்லிய விருதுகளை எல்லாம் ஆகவ மல்லன் கொண்டிருந்தான். வீரராஜேந்திரன் அவனை வென்றபோது அவைகளை எல்லாம் வெற்றிப் பொருளாகக் கவர்ந்து கொண்டான்.

V. பொது மக்களுடைய விருதுகள்.

மேலே சொன்னபடி அரசர்களுடைய விருதுகள் ஏற்பட்டிருக்க, சாதாரண மக்களும் தங்கள் தங்கள் குலத்துக்கு ஏற்றபடி சில விருதுகளைக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு சாதிக்கும் வெவ்வேறு விருதுகள் உண்டு. இச்சாதிகள் இடங்கை வலங்கை என இரண்டு பெரும் பகுப்புகளைக் கொண்டிருந்தார்கள். ஒரு சாதியினுடைய விருதை மற்றொரு சாதியார் எடுத்துக் கொள்ளக்கூடாது. அவ்விதம் ஒருவருடைய உரிமையினை மற்றொருவர் எடுத்துக் கொள்ளாதபடி அரசன் பாதுகாப்பான். வெவ்வேறு சாதியார்களும் தங்கள்தங்களுக்கு ஏற்பட்ட விருதுகளையும் உரிமைகளையும் விட்டுக் கொடுக்க இசையமாட்டார்கள். யாராவது வழக்கத்தை மீறினால் உடனே கலகம் ஏற்படும். அக்கலகத்தினைக் கொஞ்சமேனும் தயையின்றி மன்னன் அடக்கி விடுவான். இவ்விதமாகத்தான் முன் காலத்தில் சாதி உரிமைகளைப் பாதுகாத்து வந்தார்கள்.

இப்படி யிருக்க ஏதாவது ஒரு சாதியார் அல்லது வகுப்பார் அரசனுக்கோ அல்லது நாட்டிற்கோ பெருத்த உதவியைச் செய் திருப்பார்களானல் அரசன் அவர்கள்மீது பிரியப்பட்டு அவர்க ளுக்குச் சில உயர்ந்த விருதுகளையோ அல்லது உரிமைகளையோ கொடுப்பதுண்டு. அவ்விதம் கொங்கு நாட்டில் கொங்கு சோழர் களில் கோனேரின்மை கொண்டான் என்ற பட்டப்பெயர்பெற்ற ஒரு கொங்கு சோழன் காலத்தில் அவனுக்கு உதவிபுரிந்த கண்மா ணர்க்குச் சில உரிமைகளை அளித்தான். அவ்வுரிமைகளை அக் கண் மாணர்கள் அவ்வரசனது 15-வது ஆண்டு ஆடிமாதம் முதல் இட் டுக் கொள்ளலாமென்று சாசனம் செய்து அதனைக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளலாம் என்றும் கட்டளை இட்டான். அதின்படியே இச்சாசனம் கொங்கு நாட்டில் ஐந்து கோயில் களில் வெட்டப்பட்டிருக்கக் காணலாம். வெங்கால நாட்டிற்குக் கரூரிலும், வடகொங்கிற்குப் பாரியூரிலும், மேல்கொங்கிற்குப் பேரூரிலும், தென் கொங்கிற்குக் கீரனூரிலும், கீழ் கொங்கிற்கு முடச்சூரிலும், இதே சாசனப் பிரதிகள் இருக்கக் காணலாம். இதனைக் கார்மேகக் கவிஞரும் தன் கொங்கு மண்டல சதகத்தில் அடியிற் கண்டவாறு எடுத்தாண்டிருக்கிறார்:—

"இருப்புற்ற வீட்டுக்குச் சாந்திட்டுக்கொள்ள விரண்டுசங்கு
விருப்புற்ற வாழ்விலுஞ் சாவிலு மூதவெளி நடைகாற்
செருப்பிட்டுச் செல்லப் பெறுவீர்களென்னவச் செப்பியனல்
வரைப்பத்திரம் பெற்ற கம்மாளருங் கொங்கு மண்டலமே"

மேற் சொல்லியபடி கண்மாணர்களுக்கு அளித்த உரிமை களாவன:—

1. "தங்களுக்கு நன்மை தின்மைகளுக்கு இரட்டைச் சங் கும் ஊதி பேரிகை உள்ளிட்டவை கொட்டுவித்துக் கொள்ள வும்"—இங்கே நன்மை தின்மை என்றல் 'நலம், பொலம்' என்று நாம் வழங்குபவை; அதாவது கல்யாணம், மாணம், என்பவை கள். இந்த இரண்டு காலங்களிலும் இவ்வகுப்பார் இரட்டைச் சங்கு ஊதிக் கொள்ளலாம்; பேரிகை அடித்துக் கொள்ளலாம்.

2. "தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்குப் பாத ரக்ஷை கோர்த்துக் கொள்ளவும்"—அதாவது வெளியில் போகும் போது காலுக்குச் செருப்புப் போட்டுக்கொள்ளும் உரிமை இவர் களுக்குக் கொடுக்கப்பட்டது. சில தாழ்ந்த வகுப்பார் செருப்பு

அணியப்படாதென்ற விதி இருந்தது. இப்பொழுதும்கூட நாட்டுப் புறங்களில் சில ஊர்களில் சில வகுப்பார் செருப்பு அணியக்கூடாது; அவ்விதம் அணிந்தால் குற்றம். இது பட்டக்காரர்கள் அதிகாரம் செலுத்தும் கிராமங்களில் அதிக மும்முரமாக நடைபெறுகின்றது.

3. "தங்கள் வீடுகளுக்கு சாந்து இட்டுக்கொள்ளவும்":— ஊர்களில் குடியிருக்கும் வீடுகளுக்குக் காறை பூசிச் சுண்ணம்பு அடித்தலும் ஒரு உரிமையாக அக் காலத்தில் கருதப்பட்டது. இதைப் படித்தால் நாம் வியப்புறுவோம். ஆனால் அக்காலத்தில் வீடுகளுக்குச் சாந்து பூசுவது அரிதான ஒரு பெருமை என்று எண்ணப் பட்டது. ஏழைகள் வீடுகளும் தாழ்ந்த வகுப்பார் வீடுகளும் காறையையும் சுண்ணம்பையும் கண்டிரா. ஆகவே, இதனைச் சில வகுப்பார் உரிமையாகக் கொண்டிருந்தார்கள். இந்தக் காலத்திலும் நகரபரிபாலன சபையின்கீழ் வாழும் குடிகள் தங்கள் வீடுகளைப் பழுது பார்க்கவும் சுண்ணம்பு அடிக்கவும் சபையாரிடமிருந்து உத்தாவு வாங்கவேண்டியது அவசியமல்லவா? அவ்வுத்தாவுக்கும் ஒரு கட்டணம் கட்ட வேண்டியதும் விதியாக ஏற்பட்டுவிட்டது. அப்படியிருக்கையில் சோழர்கள் காலத்தில் வீட்டிற்குச் சாந்து பூசிக்கொள்ள உரிமை பாராட்டுவதும் அவ்வுரிமையினை அரசன் அளிப்பதும் ஒரு வியப்பாக நாம் கருதக்கூடாது.

ஆகவே அரசருடைய உரிமைகளும் பொதுமக்களின் உரிமைகளும் எவ்விதமாய்ச் சோழர் காலத்தில் இருந்து வந்தன என்பதைக் கரூர்ச் சாசனங்கள் மூலமாக நாம் தெளிவாக அறிந்தோம். இச்சாசனங்களில் இன்னும் பல விஷயங்கள் ஆராய்ச்சிக்குத் தகுந்தவைகளாக இருக்கின்றன. உதாரணமாக, சோழர்கள் எடுத்த படையெடுப்புகள், புரிந்த போர்கள், வென்ற நாடுகள், தோற்கடித்த அரசர்கள், அளித்த நன்கொடைகள் முதலியவைகள் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும், அக்காலத்தில் அரசனுடைய உத்தியோகஸ்தர்களின் பெயர்களும், சாசனங்களுக்குச் சாட்சிகள் போட்ட மக்களின்பெயர்களும், பொதுமக்கள் இட்டுக்கொண்ட பட்டப் பெயர்களும் ஆகியவைகளைத் தெளிவாக அறியலாம். அவைகள் ஏனைய ஊர்ச்சாசனங்களிலும் இருப்பதாலும், இவ்வூர்ச் சாசனங்களில் அவைகளில் வேறுவித சிறப்புகளைக் காணாததினாலும் அவைகளைத் தனியாக இங்கு எடுத்து ஆராயவில்லை. (முற்றும்)

திருச்சிமலைக்கோயில்

(முன் உஉஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அ வது பட்டம்

சாலியவாகன சகாப்தம் ௧௭உ௰ன் மேல் செல்லா நின்ற துந்துபிஸ்ரீ அற்பிசிமீ முதல் பார்த்திபஸ்ரீ தைமீ மவுன சிதம்பரநாதத் தம்பிரான் அவர்கள் பட்டம் ஸ்ரீ உச.

ஷெயார் சுவாமி கோவில் கெர்ப்பக்கிரகமும் முன் மண்டபமும் சித்திர மண்டபம் முதலாகியதெல்லாம் தட்டோடு போட்டு வெள்ளை வைத்து தீர்மானஞ் செய்து சித்திரமண்டபத்தின் மதில்களெல்லாம் வெள்ளை வைத்து சுத்தம்பண்ணி அதில் சில பூதகணங்களெல்லாம் திருவுரு எழுதிவித்து பின்பு உச்சவாதி மண்டபத்திற்கும் மேலே தட்டோடு போட்டு தீர்மானஞ்செய்தது. பின்பு அம்மனுக்கு வெள்ளி ரிஷபவாகனமும் சுவாமிக்கு யானைவாகனமும் செய்துவைத்ததுவுமல்லாமல் ஷெ சுவாமியவர்கள் மாரிபத்தில் முதலிச்சி தைலம்மை அண்ணியென்பவள் யாசகம் செய்து அம்மனுக்கு ரெத்தினஞ் செய்து வைத்தாள்.

௯-வது பட்டம்

சாலியவாகன சகாப்தம் ௧௭௬௰ன் மேல் செல்லாநின்ற பார்த்திப ஸ்ரீ தைமீ 22௨ முதல் ௧௭௱௬௰ன் சர்வசித்து ஸ்ரீ சித்திரைமீ அம்பலவாணத் தம்பிரானவர்கள் பட்டம் ஸ்ரீ௧ மீ ஷெ அம்பலவாணத் தம்பிரான் சிறு பிள்ளையாகவும் துஷ்டசாவகாசமாகவும் இருந்ததைப்பற்றி ஷெ அம்பலவாணத் தம்பிரானை தள்ளுபடி செய்து சிதம்பரநாதத்தம்பிரான் பண்டார சந்நிதியால் நேமகஞ் செய்து அனுப்பி கலெக்டர் துரை யவர்களுக்கு அர்ஜுபும் எழுதியனுப்பினபடியே ௧௮௱உ௭ ஸ்ரீ ஜுன்மீ 14௨யில் சந்ததாச்சுது.

௰வது பட்டம்

சாலியவாகன சகாப்தம் ௧௭௱௬௰ன் சருவசித்துஸ்ரீ சித்திரைமீ முதல் சோமகிருதுஸ்ரீ தைமீ ௰உ௨ வரைக்கும் சிதம்பரநாத தம்பிரானவர்கள் பட்டம் ஸ்ரீ ௰௬ மீ ௧.

ஷெயார் அவர்கள் முன்னிருந்த கடன்களில் அநேக கடன்களெல்லாம் தீர்த்தும், கர ஸ்ரீத்தில் சுவாமிக்கு அஷடபந்தனத்துக்கு ரூ. ௧௰௱ சிலவுக்குப் போட்டு விமானத்துக்கு தங்கமுலாத்

துக்கு ரூ.க௦௦௦ம் போட்டும் எடுபிடிகள் ஆலவட்டம்மகரதோரணம் சண்டா ஈயோட்டி முதலாகியதும் வெகுவாச் செய்துவைத்தும், தங்கப் பல்லக்குகள் சேதமாய்ப்போய்விட்டதுக்கு ரூ. க௦௦௦வரையில் தந்தங்கள் வாங்கி அநேக வேலைகளும் செய்துவைத்து, மடம் பழுதாயிருந்ததற்குப் பழுது பார்த்தும், புதுக்கட்டடம் கட்டவும் பாவுகல்லு, உத்திரம், போதிகை, தூண் முதலாகியும் கிரயங் கொடுத்து வாங்கியும் ஷை வகையரா சிலவுகளுக்காக ரூ. உ௦௦௦ அமானத்தில் கையிருப்பில் வைத்து ஷை பல்லக்கு வேலை செய்து மட்டக் கட்டட வேலை நிறைவேறுவதற்கு முன்னமே ஷை தம்பிரானவர்களுக்குப் புடனியில் பனிச்சை கண்டு உபத்திரமாக இருக்கையில் கோவில் திருவாபரணம் வெள்ளி ரிஷபவாகனங்கள் வெள்ளிக்குடம் வெள்ளிக்குடை பித்தளை கொப்பரை தாம்பிர கொப்பரை ஷை குடங்கள் தவலை தாம்பாளம் முதலாகிய பாத்திரங்களுக்கும் மடத்திலிருக்கப்பட்ட கொப்பரை, தவலை, கெடாரம், தாம்பாளம், சொம்புகள் இருப்புப் பாத்திரங்கள் பூசைமடம் பாத்திரம் முதலியவைகளுக்கும் களஞ்சியம் இருப்புக் கலம் உஈ௦௦ம் உக்கிராண இருப்புச் சாமான்கள் முதலாகியதுக்கும் கணக்குகள் முதலாகியதுக்கும் பேரிஸ்து முதலாகிய கணக்குகளும் தயார் செய்து ஷை கணக்கில் ஷை தம்பிரானவர்களும் கையெழுத்து வைத்தும் இவ்வித விபரங்களைக் கண்டு தர்மபுரம் பண்டார சந்நிதியவர்களுக்கும் விண்ணப்ப பத்திரம் எழுதி யனுப்பிவைத்து இந்த மலைமடம் கட்டளை விசாரணையைத் தனக்குப்பின் ஷை வேலையைத் தனெப்பந்தம் சுவாமி காரியம் செம்மையாய்ப் பார்க்கத் திறமையுள்ளவரான திருபுவனம் கட்டளையில் வேலை பார்க்கப் பட்டவரான அருணசலத் தம்பிரானென்பவரை அனுப்பிவைக்க வேண்டுமென்று தர்மபுர ஆதீனம் பண்டார சந்நிதிக்கும் காசி மடத்துக்கும் விண்ணப்ப பத்திரம் எழுதி தபால் மார்க்கமாக அனுப்பிவைத்த மூன்றாம்நாள் தெய்வகதி யடைந்தார். அதின் பேரில் இவ்விடத்தில் வந்து வீடுகளில் யாசகஞ்செய்து சாப்பிட்டுக்கொண்டிருந்த வைத்திலிங்கத் தம்பிரானென்பவர் ம-ா-ா-ஸ்ரீ பாலசுப்பிரமணிய முதலியாரவர்களிடத்தில் போய் ரொம்பவும் மாரீசம்பண்ணியும் சுவாமி காரியத்தில் மிகுந்த உண்மையாகவும் பயபக்தியோடும் கட்டளை வேலையைச் செம்மையாய் நடப்பி வைத்துக்கொண்டு உங்கள் உத்திரவுப்படியே நடந்துகொண்டு வருகி

றேன். என்பேரில் தயவு வைத்து தர்மபுர மாதீன பண்டார சந்நிதி யவர்களுக்குங் காசிமடத்தார் அவர்களுக்கும் தாங்கள் எழுதி யனுப்பி உத்திரவு வரவழைத்தும் மடத்தில் வேலே பார்க்கப்பட்ட காரியஸ்தாளேக்கொண்டும் எனக்கு வேலே கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதில் ஷை முதலியாரவர்கள் பண்டார சந்நிதிக்கும் எழுதியதுமல்லாமல் மடத்தின் வேலே காரியஸ்தர்களேக்கொண்டு இவ்விடத்திலிருக்கும் வைத்திலிங்கத் தம்பிரானேத்தானே கட்டளே வேலே பார்க்கும்படியாக உத்திரவு அனுப்பவேண்டுமென்று எழுதச் சொன்னதின்பேரில் ஷை முதலியாரவர்கள் ஸ்தலகாரும் சொல் தட்டாமல் ஷையார் பண்டார சந்நிதி யவர்களுக்கு எழுதினதில் ஷை காரியஸ்தரைக் கோபித்துக் கொண்டு மறுபடி இவ்விடத்திலிருந்த வைத்திலிங்கத் தம்பிரானே நேரில் தருமபுரத்திற்கு வரவழைத்து ஷை கட்டளே வேலே பார்ப்பதற்கு வேண்டிய ஆதாவுகளெல்லாம் எழுதிக் கொடுக்கச்சொல்லி ஸ்டாம்பில் வாங்கிக்கொண்டு அதன்பேரில் இந்த வைத்திலிங்கத் தம்பிரானே நேமகம் செய்து அனுப்பலானது.

இடும்பை தருவன நான்கு

1. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம்
   என்றும் இடும்பை தரும். (குறள் 138)
2. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
   தீரா இடும்பை தரும். (குறள் 508)
3. தேரான் றெளிவுந் தெளிந்தான் கண்ணயுறவுந்
   தீரா இடும்பை தரும். (குறள் 510)
4. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்
   பேரா இடும்பை தரும். (குறள் 892)

1. ஒருவனுக்கு நல்ல வொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீய வொழுக்கம், பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும்.

2. தன்னேடு இயைபுடைய னல்லாதானைப் பிறப்பு முதலியவற்றுனும் செயலானும், ஆராயாது தெளிந்த அரசனுக்கு, அத் தெளிவு தன் வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

3. அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும், ஆராய்ந்து தெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும், இவ்விரண்டும், அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

4. ஆற்றல்களால் பெரிய ராயினுரை, வேந்தர் நன்குமதியாது, அவமதித்து ஒழுகுவாராயின், அவ்வொழுக்கம் அப்பெரியாரால், அவர்க்கு என்ஞான்றும் நீங்காத துன்பங்களேக் கொடுக்கும்.

ஒரத்தி - எம். முனுசாமி ஆச்சாரி.

அறிவியற் பகுதி – Science

ஒளிநூல்—(Astronomy)

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்]

(முன் உஉ௰-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் பல சிறந்த புலவர்களிருந்தனர். பிரான்சில் லா கெய்லி (La Caille) என்ற அறிஞர் 1713-ல் தோன்றினர். அவர் 1751-ல் பூமியின் தென் பகுதியிற் காணப்படும் விண்மீன்களின் அட்டவணையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் புறப்பட்டு ஆப்பிரிக்கா (Africa) கண்டத்தின் தென்கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) யை அடைந்தார். பூமியின் தெற்கு முனைக்கும் (South Pole) மகரச் சக்கரத்திற்கும் (Tropic of Capricorn) இடையே காணப்பெறுவனவற்றுள் 9800 விண்மீன்களைக் கண்டு அவர் ஓர் அட்டவணை எழுதினர். இரவிப் பெயர்ச்சியைக் கணிப்பதற்குப் புது வழியாம் அட்டவணையைத் தயாரித்ததோடு, புதன், சுக்கிரன் ஆகிய கோள்களின் பெயர்ச்சியையும் அவர் ஆராய்ந்தார். அவர் 1762-ல் இறந்தார்.

அவ்வாண்டிலேயே மற்ஞெரு புலவர் காட்டிஞ்சன் (Gottingen) நகரில் மடிந்தார். அவர் பெயர் பேராசிரியர் மேயர் (Professor Mayer) என்பது. அவர் திங்கள் முதலிய கோள்களின் போக்கைக் கணிப்பதற்கு அட்டவணைகள் தயாரித்தார். அவைகள் மிகவும் நுட்பமானவைகளாய் நாவிகர் பஞ்சாங்கம் (Nautical Almanac) கணிப்பதற்குப் பேருதவியா யிருக்கின்றன. அவர் தமது நாற்பத்தோராவது வயதில் விண்ணுலகடைந்தார். அவருடைய அட்டவணைகளுக்காக ஆங்கில அரசாங்கத்தார் அவருடைய மனைவிக்கு மூவாயிரம் பவுன்கள் பரிசாகக் கொடுத்தார்கள்.

அயன சலனத்தைப் பற்றிய கொள்கையை உறுதியாக வெளிப்படுத்தியவர் டி அலெம்பர்ட் (D'Alembert) என்ற புலவர். அவர் கி. பி. 1783-ல் மறைந்தார்.

யூலர் (Euler) என்ற புலவர் அளவிறந்த புதுமைகளைக் கண்டறிந்தார். லா கிராஞ்ஜ் (La Grnage) என்ற பெரியாரொருவர் 1736-ல் டியூரின் (Turin) நகரில் பிறந்தார். அவர் வியாழன் என்ற கோளின் மதிகளை நன்கு ஆராய்ந்ததோடு கோள்களில் ஒன்றற்கொன்றுள்ள தொடர்பையும் அவைகளின் பெயர்ச்சியையும் மிகநுட்பமாகக் குறித்துணர்ந்தார்.

லா பிளேஸ் (LaPlace என்பவரும் ஒப்புயர்வற்ற புலவரே. அவர் மதிப்பெயர்ச்சிக் கணித அட்டவணையில் சில புதிய சீர்திருத்தங்களைச் செய்ததோடு அயன சலனத்தையும் நுண்ணிதின் ஆராய்ந்தார். ஆராய்ச்சிக்கேற்ற பல நுட்பமான கருவிகளைச் செய்தவர் ட்ரேளட்டன் (Troughton) என்ற அறிஞர். அவருடைய கருவிகளில் ஒன்றேனும் இல்லாத சோதிக் காட்சிச்சாலேயே கிடையாதென்று துணிந்து கூறலாம். இனி, இந்தியாவின் வானநூல் வளர்ச்சி வரலாற்றை ஆராய்வாம்.

இந்தியாவின் பண்டைமக்களாகிய தமிழரே உலகில் வான நூல் வளர்ச்சிக்குத் தலைவர் என்றும், அவர்களிடத்திலிருந்து எகிப்து முதலிய இடங்களுக்கு இக்கலை பரவிற்றென்றும் இக்கட்டுரைத் தொடக்கத்தில் விளக்கினும். ஆரியர் தமிழ்நாட்டிற் புகுந்து தமிழரோடு கலந்தபின்னர் தமது செல்வாக்கை நிலைநாட்டத் தொடங்கி தமிழில் இருந்த நூல்களை வடமொழியில் மொழி பெயர்க்கத் தொடங்கினர். மயன் என்பவனுக்கு இரவி என்பவனால் கூறப்பெற்ற இரவி சித்தாந்தம் என்ற நூல் இற்றைக்கு 21,65,031 யாண்டுகளுக்கு முன் இயற்றப்பெற்றதெனத் தெரிகிறது. இது இப்பொழுது வடமொழியில் இருக்கிறது. இது மிகப் பழமையானது என்பதுதான் இது எழுதி 21,65,031 யாண்டுகளாகின்றன என்பதன் கருத்து. இது பூர்வ சூர்யசித்தாந்தம் என இப்போது பெயர் பெற்றுள்ளது.

திருக்குறள் என்பது திருவள்ளுவநாயனரால் தமிழில் இயற்றப்பெற்றது. இதனை இப்போது சிலர் வடமொழியில் அரைகுறையா மொழிபெயர்த்துக்கொண்டு வடமொழியின் மொழி பெயர்ப்பே தமிழ்த் திருக்குறள் என்று துணிந்து வெளிப்படையாகக் கூறவும் தலைப்பட்டிருக்கின்றனர். முதல் நூலாகிய பெரிய புராணத்தையும் அங்ஙனமே கூறுவர். சிவஞான போதத்தையும் அவ்வாறே சிலர் கூறுகின்றனர். அறியாமையிருளால் மூடுண்டு

கிடக்கும் தமிழரிற் சிலரும் அவ்வேமாற்றுக் கூற்றுக்கு உடன்படுவர். இங்ஙனமாகப் பல தமிழ் நூல்கள் வடமொழியில் பெயர்க்கப் பெற்று வழங்குவனவாயின. பல பிரதிகள் செய்யப்பெற இயலாத அக்காலத்திய நூல்கள் பல தோன்றித் தோன்றிமறைந்தன.

நான்முகன் என்பவன் ஒரு நூல் இயற்றியதாகத் தெரிகிறது. அது பிரமசித்தாந்தம் எனப்பெயர் பெறும். பின்னர், கால மாறுபாட்டிற்கு ஏற்றவாறு கோள்களின் கதிகள் மாறுபடுவதையுணர்ந்து அவ்வப்போது பலர் பல நூல்கள் இயற்று வாராயினர். அவருள் முதன்மையானவர் வியாசர், வசிட்டர், அத்திரி, பாராசார், காசியபர்,நாரதர், கருக்கர், மரீசி,மனு, ஆங்கீரசர், உலோமர், புலிசர், சியாவனர், யவனர், பிருகு, சௌனகர் முதலியோராவர்.

சாலிவாகனன் என்ற அரசன் கி. பி. 78-ல் பட்டத்திற்கு வந்தான், அவன் சோதி நூற் கலைக்கு ஒரு ஊன்றுகோல் போல, தன்காலம் வரை உள்ள மாறுபாடுகளைக் களைந்து கணிதவழிகளைச் சரிசெய்தான். அவன் பெயரால் அவன் முடிசூடிய நாள் தொடங்கி சாலிவாகனன் ஆண்டு என ஒன்று வழங்கி வருகிறது. அவனுக்கு 134 ஆண்டுகளுக்குமுன், அதாவது கி. மு. 56-ல், இருந்த விக்கிரமாதித்தன் என்ற மன்னனும், கி. பி. 40-ல் இருந்த போசன் என்ற அரசனும் ஒளிநூல் வளர்ச்சியில் மிக ஈடுபட்டு ஒளிநூற் புலவர்களைப் போற்றி வந்தனர். ஆதலின் அவர்களுடைய பெயர்களாலும் ஆண்டுகள் வழங்கிவருகின்றன.

கி. பி. 427-ல் இருந்த சாலிவாகனன் என்ற மற்றொருமன்னன் பிரபவ என்பது முதலாக அட்சய முடியஉள்ள அறுபது ஆண்டு வட்டத்தை ஏற்படுத்தினான். அதுமுதல் இன்றுவரை அவ்வாண்டுப் பெயர்கள் இந்தியாவில் வழங்கிவருவன வாயின.

கி. பி. 522-ல் ஆரியப்பட்டர் என்ற அறிஞர் ஒருவர் இருந்தார். அவர் ஆரியப்பட்டீயம் என்ற நூலை இயற்றினார். அவர் கி. பி. 1322-ல் இருந்ததாகச் சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். சூரியன் என்ற பெயரையுடைய மற்றொருவர் கி. பி. 1068-ல் சூரிய சித்தாந்தம் என்ற நூலை எழுதினார். முன்னரே உள்ள சூரிய சித்தாந்தத்திற்கு இது வேறுபட்டது.

பாஸ்கரன் என்ற ஒருவர் கி. பி. 1150-ல் பாஸ்கரீயம் என்ற நூலியற்றினார். உள்ளமுடையான் என்ற மன்னர் கி. பி. 1234-ல் உள்ளமுடையான் என்ற கணித நூலை யாத்தனர்.

கி. பி. 288 லிருந்த பிரதாபருத்திரன், கி. பி. 1301 லிருந்த இராமதேவன், கி. பி. 1529 லிருந்த கிருஷ்ணராயன் ஆகிய மன்னவர் சோதிநூற் புலவரை ஆதரித்து வந்த காரணத்தால் அவர்கள் பெயர்களால் ஆண்டுகள் கணக்கிடப்பட்டு வருவன வாயின. கி. பி. 1506-ல் வரருசி என்பவர் ஒரு நூல் இயற்றினர்.

மலையாள நாட்டின் தலைநகராக இருந்த பதுமனுபபுரத்தில் பல கணிதப் புலவர்க ளிருந்ததாகத் தெரியவருகிறது. அவருள் மேழத்தூர் நாராயணபட்டர் என்பவர் நாரயண விரசிதம் என்றநூலை இயற்றினர். அந்நாட்டில் இன்னும் பல கணிதம் வல்ல புலவர்கள் பலர் இருக்கின்றனர்கள். (தொடரும்)

பொருணூல்—(Economics)

சென்னை மாகாணப் பொருளாதார நெருக்கடி*

(1820—1854)

[திரு. B. நடராஜபிள்ளை யவர்கள் B. A.]

பெருமலை பிளந்திடப் பிறங்குமோர் பெருவிடர்
விடாகத் தொளிரும் விளங்குபொன் மண்நுரை.

—டேன்னிஸன்.

சரியாக நூறாண்டுகட்கு முன்னர் இந்தியாவில் பெரியதொரு பொருளதார நெருக்கடி உண்டாயிற்று. அது 1820-ம் ஆண்டில் தொடங்கி, பல ஏற்றத்தாழ்வுகளுடன் 1854-ம் ஆண்டுவரை யிருந்தது. அது இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இருந்ததேனும், "ரயத்துவாரி" நிலத்திட்ட மமைந்த சென்னை, பம்பாய் ஆகியமாகாணங்களில்தான் மிகவும் கொடுமையாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் சென்னைமாகாணம் நிறுவப்பட்டது. அது நிறுவப்பெற்ற சில ஆண்டுகளுக்குள்ளேயே கொடியதொரு பொருளாதார நெருக்கடி உண்டாயிற்று; அரசாங்கத்தின் பொருள் நிலை ஆட்டங் கொண்டது. மக்கள் தம் பொருணிலை பெரிதுங்

---

* இஃது சென்னைப் பல்கலைக் கழகப் பொருணூற் பேராசிரியரான டாக்டர் பி. ஜே. தாமஸ் என்பாரும், பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவரான திரு. B. நடராஜபிள்ளை என்பாரும் அண்ணாமலை நகரில் நடந்த இந்தியப் பொருளாதார மாநாட்டிற்கு எழுதியனுப்பிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையின் மொழி பெயர்ப்பாகும்.

குலைந்தது. மாகாணம் முழுதும் மட்டற்ற துன்பம்! 1825-க்கும் 1854-க்கு மிடையில் அகவிலை வரவர இறங்கிக்கொண்டே வந்தது. எனினும் 1840-க்கும் 1845-க்கும் இடையே இறங்கிய இறக்கமே மிகவுங் குறைந்ததாகும். அதற்கு இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் இருந்த விலையை நோக்க இவ்விறக்கவிலை சரிபாதியே யாகும்.

1820—1854 பொருளாதார நெருக்கடிக்கும் 1920-ல் தோன்றி இன்றும் நிகழும்நெருக்கடிக்கும் பல ஒற்றுமைகள் உள. இந்நெருக்கடிகளின் ஏது நோக்க வேற்றுமை தோன்றினும் அவற்றின் போக்குகளிலும் அவை விளைக்கும் பலன்களிலும் ஒற்றுமை சிறந்து விளங்குகின்றது. இருநெருக்கடிகளும் வருவாயைக் குறைத்து, வாணிபத்தைக் குலைத்து. அரசாங்கத்தைத் தயங்கச் செய்தன. இரண்டாலும் வேளாண்மையே கழிபெருங் கேடுற்றது. வரி வாரம் வட்டிமுதலிய சுமைகள் குறையாததால் வேளாண்மைக் காரர்களே தவிக்கலுற்றனர். 1820-முதல் 1854 வரை நிகழ்ந்த நெருக்கடியின் கொடுமைகளைத் தணிக்கவே, வாளாவிருப்பதே பெருநீதி யெனக் கொண்டிருந்த அரசாங்கத்தார், அக்கொள்கையினைச் சிறிதுமாற்றி நீர்ப்பாசனங்கள் அமைத்தல், சாலைகள் போடுதல் முதலிய வேளாண்மை வளர்ச்சித்துறைப் பணிகளிற் சற்றே தலையிட்டனர். ஏழை உழவர்களின் வரிப்பளுவை எளிதாக்கும் நோக்கத்துடனேயே 1860-ல் புதியதோர் நிலவரித்திட்ட முறை நிறுவப்பட்டது. சென்ற நூறுண்டுகளில், நிலைமைகள் எவ்வளவோ மாறுதலடைந்திருக்கின்றன. எனினும், இற்றைய நெருக்கடியோடு நாம் போரடுவதற்கு 1820—54 நெருக்கடியின் அனுபவங்கள் ஒருசிறிது உதவியளிக்கவல்லதாகவே இருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்தியாவிலே எழுந்த நெருக்கடிகளுள் இதுவே மிகப் பெரியது என்றாலும், இந்தியப் பொருளாதார வரலாற்றில் தலைமையான இந்நிகழ்ச்சியின் மீது பொருளாதாரப் பண்டிதர்கள் தம் கருத்தைப் போதியவாறு செலுத்தவில்லை. இதைக் குறித்தெழுதப்பட்டன வெல்லாம், திரு. சீனிவாசராகவ ஐயங்கார் என்பவர் 1892-ல் தொகுத்த 'சென்ற 40 ஆண்டிற் சென்னை மாகாணத்தின் முற்போக்கு" (Memorandum on Progress of the Madras Presidency during the 40 years) என்ற நூலிற் காணும் ஒன்றிரண்டு பந்திகளும், பெடர் என்பார் இந்தியாவின் ஒழுக்க, செல்வ முற்போக்கு அறிக்கை (Report

of the Moral & Material Progress) களின் 1882-83-ம் ஆண்டு வெளியீட்டில் வரைந்துள்ள ஒருசிறு குறிப்புமேயாம். இப்பொருள் குறித்த எட்டுச் சான்றுகளை ஆராய்ந்து வருகின்றோம். விரிந்த ஒருநூல் விரைவில் வெளியிடப்படும். எனவே இக்கட்டுரையில் 1820-54 பொருளாதார நெருக்கடியின் ஏதுகள் மட்டும் ஆய்ந்து விளக்கப்படும்.

விலைமலிவின் காரணங்கள்

திரு. சீனிவாச ராகவய்யங்கார் 1820-முதல் 1854 வரை நிகழ்ந்த நெருக்கடி இந்தியாவில் மட்டுந்தான் சிறப்பாக இருந்ததென்று கருதி அதற்கு உள்நாட்டுப் பொருளாதார நிலையே காரணமென்று கூறிப்போந்தார். ஆனால் இங்கிலாந்திலும், ஏனைய மேலை ஐரோப்பிய நாடுகளிலும் அத்தகைய நெருக்கடி இருந்ததென்பதை அவர் உணர்ந்தாரில்லை. உலகம் முழுவதையுமே ஒரோவோர் காலத்தில் தாக்கும் விலை மாறுதல்களில் அதுவும் ஒன்றாகும். பதினாறும் நூற்றாண்டில் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு வெள்ளியானது, என்று வரத்தொடங்கிற்றோ அன்று முதற்கொண்டு ஐரோப்பாவில் பல நீடித்த விலை மாறுதல்களும் உண்டாயின. உலகின் பல பகுதிகளும் வாணிபத்தால் பிணைக்கப்பட்டிருக்கவே, இவ்விலை மாற்ற இயக்கங்களும் எங்கணும் பரந்து காணப்பட்டன.

ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் மிக நெருங்கிய தொடர்பில்லாத காலங்களாகிய 16-ம் 17-ம் நூற்றாண்டுகளிற்கூட ஐரோப்பாவில் விலைகள் ஏறியபோது இந்தியாவிலும் விலைகள் ஏறின. அக்காலத்தில் முகலாய மன்னர்கள் தலைமுறை தலைமுறைதோறும் வரிகளை மிகுதியாக ஏற்றிவந்ததே அப்பொழுதைய விலையேற்றத்திற் கேதுவாகுமெனக் கருதப்பட்டது.

பொருளாதார நிலைச் சுழற்சியிலே விலை ஏற்றமும் விலை இறக்கமும் வாணிப ஊக்கமும், வாணிபச் சுணக்கமும் ஒன்றன்பின் ஒன்றாக மாறிமாறிக் குறிப்பிட்ட சில காலவட்டங்களுக்கொருமுறை தோன்றுகின்றன என்று சில பொருளாதார நூல் வல்லுநர் கருதுகின்றனர். இதனை அவர் 'வாணிபச் சக்கரம்' என்பர். இது ஒப்போ தப்போ என்றாராய்வதை நாம் ஈண்டு மேற்கொள்ளவேண்டா. பண்டைக்கால விலை மாறுதல்களுக்குப்

பணப் பெருக்கமோ சுருக்கமோதான் தலையாய ஏதுவாகக் கருதப்பட்டுவந்தது இந்நாளில் பொன்னுக்கும் பொருள் விலைக்கு முள்ள தொடர்பு சுருங்கிவிட்டது. 19-ம் நூற்றாண்டிலும் அதற்கு முற்காலத்திலும் பொன், வெள்ளி முதலாகிய அரிய உலோகங்களுக்கும் பண்டங்களின் விலைகளுக்கும் இருந்த தொடர்பு மிக நெருங்கிய தொன்றாகும். உண்டியல்களும் நாணயத் தாள்களும் (Currency notes) வெகு சுருக்கமாக அக்காலத்தில் வழங்கிவந்தமையால் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களுமே அக்காலத்திற் செலாவணியாகி வந்தன.

நீண்டகால விலை இறக்கத்தைப் பற்றி நுண்ணிதில் ஆராய்ந்து வந்த ஸர் வால்டர் லேயிட்டன் என்பவர் 1820-முதல் 1854 வரை ஐரோப்பாவில் நிகழ்ந்த நெருக்கடியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:—

"1810-ம் ஆண்டிற்கு முன்பு, ஐரோப்பாகண்டம் தனக்குத் தேவையான அரிய உலோகங்களை மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலுமிருந்த ஸ்பெயின் குடியேற்றநாடுகளின் கனிகளிலிருந்து பெற்றுக்கொண்டிருந்தது. ஆனால் பிரெஞ்சுப் புரட்சிப் போர்நடந்த காலத்தில் மேற்கூறிய குடியேற்ற நாடுகள் தம் அடிமைத்தளைகளை உடைத்துத் தன்னுரிமை பெற்றன. பின்னர் 15-ஆண்டுகள் வரை அந்நாடுகளில் குழப்பமும் உள்நாட்டுப் போரும் நிலவின. அதனால் உலோகக்கனிக ளெல்லாம் அகழ்வாரின்றிப் பாழ்பட்டுக் கிடந்தன. எனவே தங்கம் வெள்ளி ஆகிய அரிய உலோகங்களின் உற்பத்தியிற் பெரிய குறைவு ஏற்பட்டது." டெல்மார் என்பவர் போட்ட புள்ளியின்படி ஸ்பெயினைச் சார்ந்த அமெரிக்கக் குடியேற்றநாடுகளி லிருந்து அகப்பட்ட தங்கமும் வெள்ளியும், பிரெஞ்சுப் புரட்சிப் போர்த் தொடக்கத்திற்கு முந்திய ஆண்டில் 72லக்ஷம் பவுன் பெறுமானதாயிருந்தது, 1825-ல் 50 இலட்சமாகவும், 1829-ல் 40லட்சமாகவும் குறைவுற்றது. அதுவே ஐரோப்பாவில் எழுந்த நெருக்கடிக்குத் தலையான காரணமாகும்.

தங்கம் வெள்ளி ஆகிய அரும்பொருள்களின் குறைவு ஐரோப்பாவை எவ்வாறு தாக்கியதோ அதுபோலவே இந்தியாவையும் தாக்கியது. இந்தியாவில் போதுமான பொற்சுரங்கங்களோ வெள்ளிச்சுரங்கங்களோ இல்லாமையாலே, இவ்விரு உலோகங்

களும் அயல்நாடுகளிலிருந்தே ஈண்டு வரவேண்டியனவாயிருந்தன. வெளிநாடுகளில் அவற்றின் உற்பத்தி குறையவே, இந்தியாவில் அவை இறக்குமதியாகும் அளவும் குறைந்தது. அக்காலத்தாயினுஞ் சரி, இக்காலத்தாயினுஞ் சரி, எல்லாப் பண்டங்களின் விலையும் ஒருங்கே மலிவதற்குப் பணத்தின் உற்பத்தி முன்னினும் குறைந்ததாகவேனும், இன்றேல் உற்பத்தியினளவு முன்போலதாகவிருக்க, தேவை அதற்கு அதிகமாகவேனும், அன்றி இவ்விரண்டுஞ் சேர்ந்தேனும் ஏதுவாக அமையவேண்டும். 1800-ம் ஆண்டிற்குப் பின்னர் இந்தியாவில் பணத்தின் தொகை பல்வேறு காரணங்களாற் குறைவுபட்டது. ஆனால் அதே வேளையில், முன் பணத்தாலன்றி பண்டமாற்றலால் முடிவுபெற்ற பல பணிகளுக்கும் இப்பொழுது பணம் வேண்டப்படவே அதன் தேவையும் மிகுதியாயிற்று. இது எவ்வாறு நிகழ்ந்ததெனக் காண்பாம். (தொடரும்)

பச்சை குத்துதல்

மக்கள் தம் உடலின் பல பகுதிகளிலும் தேள், பாம்பு, ஆண்மகன், பெண்போன்ற பச்சை குத்திக்கொள்ளும் வழக்கத்தை இந்நாட்டில் இன்றுங் காணலாம். பெரும்பான்மையாகப் பெண்களும் சிறுபான்மை ஆண்களும் இவ்வாறு அழகு செய்துகொள்வர். பச்சையுடன் சிவப்பு சேர்த்துக் குத்திக்கொள்வதும், இத்துறையில் பின்னர்ப் புகுந்த வளர்ச்சியைக் குறிக்கும். நாவாய்களில் வேலைசெய்யும் மாலுமிகளும் கப்பற்படை வீரர்களும் இவ்வாறு சிவப்பும் பச்சையுங் கலந்து குத்திக்கொண்டிருப்பதைக் காணலாம். இஃது பிறநாடுகளில் நாகரிகம் முதிராதவர்களாக் கருதப்படும் சூலூக்கள் மையோரியர்கள் முதலிய பண்டைக்கால மக்களைப் பார்த்துக் கற்றுக்கொண்ட பழக்கமென்று சிலர் கூறுவர். இங்கிலாந்தில் சார்லஸ் மன்னன் காலத்தில் (17-ம் நூற்றாண்டு) பச்சைக்கு மாறாகக் கறுப்பு குத்திக்கொள்ளுதல் பெருவாரியாக ஆங்கிலப் பெண்மக்களிடங் காணப்பட்டது. பிரான்சுநாட்டிலும் ஏறக்குறைய இப்பழக்கம் அக்காலத்தில் இருந்து வந்தது. ஞாயிறு, திங்கள், விண்மீன், சிலுவை போன்ற உருவங்களை முகங்களில் குத்திக்கொண்டதுடன் குதிரைகள் பூட்டிய நாற்சக்கரவண்டி (கோச்), நாவாய் போன்ற உருவங்களையுஞ் சிலர் குத்திக்கொண்டனர். அப்பழக்கம் இப்பொழுது பெரும்பாலும் மறைந்துவிட்டதாயினும் ''அழகுப்புள்ளி'' (Beauty Spot) என்று முகத்தில் ஒரோ வோரிடத்தில் கறுப்புப் புள்ளி குத்திக்கொள்ளும் வழக்கம் இன்றும் அவர்களிடம் காணப்படுகிறது.

—கா. சிவ. க.

மொழிபெயர்ப்பு-Translation

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் M.A., B.L.]

கபிலர்

இயற்றிய

இன்னா நாற்பது

Of Unpleasant Things : Forty (Stanzas)

By

KAPILAR

(முன் உஉ அ-ம் பக்கத் தொடர்ச்சி)

உ௩. யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா
ஊனைத்தின் றூனைப் பெருக்குதன் முன்னின்னா
தேனெய் புளிப்பிற் சுவையின்னா வாங்கின்னா
கான்யா றிடையிட்ட வூர்.

23. It is unpleasant to see kings without elephants; it is unpleasant to feed oneself with meat; it is unpleasant if ghee and honey turn sour; unpleasant to live in a village enclosed by a forest river.

உச. சிறையில்லா மூதூரின் வாயில்காப் பின்னா
துறையிருந் தாடை கழுவுத லின்னா
அறைபறை யன்னவர் சொல்லின்னா வின்னா
நிறையில்லான் கொண்ட தவம்.

24. It is unpleasant to mount guard over an unprotected old city; unpleasant to wash clothes on the banks of tanks; unpleasant too the voice of those who talk loud like a drum and unpleasant the penance of one who has no self-control.

உரு. ஏமமில் மூதூ ரிருத்தன் மிகவின்னா
தீமை யுடையா ரயலிருத்த னன்கின்னா
காம முதிரி னுயிர்க்கின்னா வாங்கின்னா
யாமென் பவரோடு நட்பு.

25. It is unpleasant to live in an unprotected old city; it is unpleasant to live in the neighbourhood of the wicked; excess of passion is prejudicial to the soul's safety; likewise it is unpleasant to be friend the conceited

உசு. நட்டா ரிடுக்கண்கள் காண்ட னனியின்னா
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா
கட்டில்லா மூதூ ருறையின்னா வாங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது.

26. It is unpleasant to behold the sorrows of friends; it is unpleasant to see the pride of the enemy; it is unpleasant to live in an old town which lacks unity; most unpleasant is gambling.

உஎ. பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா வின்னா
பெரியார்க்குத் தீய செயல்.

27. It is unpleasant to give up the association with the good and the great; to promise merely to do great things is unpleasant; it is unpleasant to tell one's woes to those who are not friendly; most unpleasant to do harm to the great.

உஅ. பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா
கிழமை யுடையார்க் களைந்திடுத லின்னா
வளமை யிலாளர் வனப்பின்னா வின்னா
இளமையுண் மூப்புப் புகல்.

28. It is unpleasant to make the dignified lose their dignity; it is unpleasant to disown those who have a claim upon one; the beauty of the ungracious is unpleasant; most unpleasant is premature old age.

உகூ. கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
வல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

29. It is unpleasant for a horse to be ridden by one ignorant of horsemanship; the words of one who has not studied his subject are unpleasant; unpleasant is the use of fine language by the needy; unpleasant it is for an illiterate man to go into the assembly of the learned.

௩௰. குறியறியான் மாநாக மாட்டுவித்த லின்னா
தறியறியா னீரின்கட் பாய்ந்தாட லின்னா
அறிவறியா மக்கட் பெறலின்னா வின்னா
செறிவிலான் கேட்ட மறை.

30. It is unpleasant for a man not versed in the art, to make a big snake dance; it is unpleasant for one not adept in swimming to jump into and play in water; it is unpleasant to beget stupid children; unpleasaut and painful to tell secrets to one who has no secrecy. (தொடரும்)

---

*ஆலகசாலி என்னும் அராபியப் பெரியாருடைய

தத்துவ ஞானக் கொள்கைகள்

[இராவ்சாகிப் V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.]

ஆலகசாலி என்பவர் கி. பி. 1058-ஆம் ஆண்டு பிறந்தவர். (அவர் ஞானம் அடைந்ததைப்பற்றி) அவரே கூறுவதை நாம் கேட்போமாக. அவர் குழந்தைப் பருவத்திலே தாம் கொண்டிருந்த எண்ணங்களை விட்டு விலகுவதற்குச் செய்த முயற்சிகளைப்பற்றிப் பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார்:—

"நான் என்னுள்ளே சொல்லிக்கொண்டதாவது:—பொருள்களின் உண்மை யறிவதே எனது நோக்கம்; ஆகையால், அறிவு இன்னதென்று உறுதிப்படுத்துவது எனக்கு இன்றியமையாததாக விருக்கிறது. தெரியவேண்டிய பொருளைப்பற்றியுள்ள ஐயப்பாடுகள் முழுவதும் நீங்கும்படி ஓர்ந்துணர்ந்து, அதனால் பின் எக்காலத்தும் அப்பொருளைப்பற்றி எவ்வகைத் தப்பெண்ணமாயினும், மாறுபட்ட கருத்தாயினும் உண்டாகாதிருப்பதே உறுதியான உண்மை யறிவு என்பது தெளிவாயிற்று. நாம், அவ்வாறு அறியும் அறிவின் உறுதியானது, நமது உணரும் ஆற்றல்களின் முயற்சி எதுமின்றியே நமது மனத்தில் திடனுறுகின்றது; அன்றியும் தவறு வாராது காக்கும் முறைகளுக்கும் அறிவுக்கும் இயல்பாக உள்ள நெருங்கிய தொடர்பினால், அவ்வறிவு

---

* Translated from Draper's Intellectual Development of Europe.

பொய்யானதென்று காட்டும்படி எளிதிற் புலப்படும் சான்று எதாயினும் கொண்டுவரப்பட்டாலும், அது யாதொரு ஐயத்தை யும் உண்டாக்கமாட்டாது. ஏனெனில், அவ்வறிவு தப்பாயிருக் குமோ என்று யாதொரு ஐயமும் நிகழ்வது கூடாமையா யிருக் கிறது. பத்து, மூன்றுக் கதிகமென்று நான் ஒத்துக்கொண் டிருக்கும்போது, 'அப்படியல்ல, மூன்று பத்தினு மதிகம், நான் சொல்வதை மெய்ப்பிப்பதற்கு இதோ என் கையிலிருக்கும் கைத் தடியைப் பாம்பாக்குகின்றேன்' என்று ஒருவன் சொல்லி அப்ப டியே மாற்றினலும் அவனுடைய பிழையைப்பற்றிய, என்னு டைய உறுதியான எண்ணம் சிறிதும் மாறுபடமாட்டாது. அவ னுடைய ஆற்றல் என்னுடைய மனத்தில் வியப்பை விளைக்குமே யன்றி என்னுடைய அறிவைப்பற்றி ஐயங்கொள்ள இடந்தாராது.

"இவ்வித உறுதிப்பாட்டுடன் இல்லாத அறிவு என் மனத்தில் நம்பிக்கையும் உறுதிப்பாடும் உண்டாக்கத்தக்க வலிமை யில்லாத தென்றும், உறுதிப்பாடில்லாத அறிவு அறிவென்னும் பெயரை வகித்தற்கே தகுதியற்றதென்றும் உறுதிகொண்டேன்.

"யானறியாத அறிவுகளின் தன்மைகளைத் தனித்தனி ஆராய்ந்ததில், புலன்கள் மூலமாக அறியும் அறிவையும் (மூன்றி லும் பத்ததிகம் போன்ற)மறுக்கக் கூடாத மூலதத்துவங்களையும் தவிர, அவ்வறிவுகளெல்லாம் இப்போது கூறிய (உறுதிப்பாடான) தன்மைகளில்லாதவைகளென்று காணப்பட்டன. அப்பால் யான் என்னுள்ளே சொல்லிக்கொண்டதாவது: இந்த நம்பிக்கையின்மை யில் அமிழ்ந்ததனல், மறுக்கக்கூடாத உறுதியான அறிவையடை வதற்குப் புலனுணர்ச்சியையும் விலக்க வொண்ணுத தப்பாத உண்மைகளையும் அடிப்படையாகத் தழுவுவதைத்தவிர வேறு நம்பிக்கையில்லை. அவைகளின் தன்மைகள் ஐயுறக் கூடாதன வென்று தோன்றியது. ஆயினும் புலனுணர்ச்சியினலும் ஆராய்ச் சியினலும் அறியும் பொருள்களில் ஐயத்துக் கிடமிருக்கக் கூடுமோ வென்று ஆராயத் துவங்கினேன். அப்போது ஐயங்கள் ஒன்றன் பின்னென்ருய்த் திரண்டுவந்து என்னுடைய உறுதியின்மையை வலுப்படுத்திவிட்டன (முற்றுவித்து விட்டன). அப்படியானல் புலன்களின் வழியாக அறியும் பொருள்களைப்பற்றி யுண்டாகும் நம்பிக்கைக்கு எதுவென்ன? (என்று ஆராயப் புகுந்தேன்.) நம்மு டைய புலன்களெல்லாவற்றிலும் கட்புலன் சிறந்த ஆற்றலுள்ளது.

ஆயினும் ஒரு நிழலைப் பார்த்து அது நிலையானதாகவும் அசைவற்றதாகவுங் கண்டு, அசையுந்தன்மை யில்லையென்று உறுதிப்படுத்துகின்றோம். அப்படி உறுதிபண்ணியும், அந்நிழலிருந்த இடத்தை ஒரு நாழிகை கழித்து வந்து பார்க்கும்போது, அது, விரைவாக மறையாமல் படிப்படியாகவும் சிறிது சிறிதாகவும், எக்காலும் நிலை கொள்ளாதவண்ணமாக மறையும் இயல்புடையதாதலால் இருந்த இடத்தினின்றும் எடுபட்டுப் போகிறதென்று பழக்கத்தால் அறிகிறோம். விண்மீன்களைப் பார்ப்போமானால், அவைகள் சிறுநாணயங்கள் போலத் தோன்றுகின்றன; ஆனால் கணிதநூல் அவைகள் நிலவுலகினும் பெரியவைகளென்று நமக்குச் சான்று பகர்கின்றன: இப்போது சொல்லியவைகளும் அவைபோன்ற மற்றவைகளும் புலன்களால் உண்மையானவைகளாக உறுதி செய்யப்பட்டாலும் அறிவினால் பொய்யானவைகளென்று தள்ளிவிடப் படுகின்றன. ஆகையால் புலன்கள் வெளியிடும் உண்மைகளில் வைத்த நம்பிக்கை உறுதி யில்லாமற் போனதைக் கண்டு அவைகளைக் கைவிட்டு விட்டேன்.

“இவ்வாறு ஆராய்ந்தபின் என்னுள்ளே சொல்லிக்கொண்டதாவது :—‘மூன்றினும் பத்ததிகம், ஒரே பொருள் படைக்கப்பட்டதாகவும் என்றென்றும் அநாதியாக உள்ளதாகவும் இருத்தல் கூடாது, ஒரு பொருள் ஒரே காலத்தில் உள்ளதாகவும் இல்லாததாகவும் இருத்தல் கூடாமை என்பவை போன்ற மூலதத்துவங்களாகிய அறிவின் கொள்கைகளே யன்றி வேறு உறுதியான தொன்று மில்லை’ யென்பதே.

“இதன்மேல் புலன்கள் பின்வருமாறு மறுமொழி கூறின. ‘அறிவின் தன்மையில் உனக்குள்ள நம்பிக்கை எங்கள்மேல் நீ வைத்திருந்த நம்பிக்கையைப் போன்றதன்றென்பதற்கு உனக்கு என்ன சான்று இருக்கிறது? நீ எங்களை நம்பியபோது, அறிவு உன் முன்வந்து தோன்றி எங்களைப் பொய்யாக்கியது; அறிவு தோன்றி யிராவிட்டால், நீ எங்களை விடாது நம்பிக்கொண்டிருப்பாய். நல்லது, அறிவு எங்கள் சான்றைக் கண்டித்தபடியே, (தான் வெளிப்பட்டு வந்தால்) அறிவின் உறுதிப்பாடுகளை மறுக்கக்கூடிய அறிவினு முயர்ந்த வலியுடையோன் இருக்கலாகாதோ? அத்தகையொருவன் வெளிப்படாமையே அவனில்லாமைக்குச் சான்றன்று.

"இத்தடைகளை மறுக்க வீணே முயன்றேன்; முயன்று உறங்குவதைப்பற்றிச் சிந்தனை செய்யப் புகுந்தபோது என்னு டைய மலைவுகள் மிகுந்தன. அதன்மேல் யான் நினைத்ததாவது: உறக்கம் நிகழும்போது நீ காணும் காட்சிகள் உண்மையும் பொருத்தமு முள்ளவைகளாக நீ கருதி (அவ்வுறக்கம் நிகழுமள வும்) அவைகளின் உண்மையைப்பற்றி ஐயப் படுகிறதில்லை. விழித்தபின், அக்காட்சிகள் வெறுந்தோற்றங்களே யன்றி வேறொன்றுமல்ல வென்பது உனக்குத் தெரிய வருகிறது. நீ விழித்திருக்கும்போது உணருகிறவைகளும் அறிகிறவைகளும் ஆகிய எல்லாம் உண்மையாகவே இருக்கின்றன வென்பதற்கு உனக்கு என்ன ஏது விருக்கின்றது? அவ்வுணர்தலும் அறிதலும் நிகழும், அந்நேரத்தில் உள்ள நனவு நிலையில் அவை எல்லாம் உண்மையே; ஆனால் கனவு நிலைக்கு நனவு நிலை எப்படி யிருக்கிறதோ, அப்படியே நனவு நிலைக்கு வேறொரு நிலை இருக்கக்கூடும். இந்த உயர்ந்த நிலையோடு ஒத்துப் பார்க்கில் நனவு நிலை கனவு நிலையே யென்று சொல்லும்படி ஆகிறது."

இவ்வாறு தத்துவ விசாரத்தில் உண்டாகும் ஐயங்களை இந்த அராபியப் பெரியார் கூறி யிருக்கிறதிலும் தெளிவாக எந்த ஐரோப் பிய நூலும் கூறுவதைக் காண்பது கூடாமையானது. உறுதி யாகவே, இந்த வழக்கை இவர் கூறியதிலும், சிறப்பாக மனதில் அழுந்தும்படி கூறுவது கூடாததே. பல தத்துவ நூலாசிரியர்கள் மயங்கக் கூறுவதை நோக்குமிடத்து இவருடைய விளங்கக்கூறல் வியப்பா யிருக்கிறது.

"என்னுடைய நிலைமையைப்பற்றிச் சிந்தனை செய்தபோது இந்த உலகத்தோடு பல்லாயிரங் கட்டுகளாற் பீடிக்கப் பட்டவனா கவும் பல இடங்களினு மிருந்து செய்யப்படும் பல சோதனைகளுக் கும் உட்பட்டவனாகவும் நானிருப்பதாகத் தெரிந்தேன். அதன் மேல் என்னுடைய செயல்களை ஆராயப் புகுந்தேன். அவற்றுள் போதனையும் கல்வி கற்பித்தலும் சிறந்தவைகளா யிருந்தன. அவைகளும், மறுமைக்கு முற்றும் பயனற்ற, முதன்மையில்லாத நூல்களின், தன்மையில் சொல்லப்பட்டனவென்று தெரிந்தேன். கல்வி பயிற்றுவதில் எனக்குள்ள நோக்கத்தைப்பற்றிச் சிந்தனை செய்தபோது, அது ஆண்டவன் கருத்துக்கேற்ற தூய்மையுடைய தன்றென்றறிந்தேன். எனக்குப் பெருமையைத், தேடிக்கொள்ளு

தலுக்காகவே என்னுடைய முயற்சிகளும் யாவும் தூண்டப் பட்டன வென்றும் கண்டேன். ஆகையால், சொத்துக்களைப் பிறர்க்கீந்துவிட்டு பாக்தாது (Bagdad) நகரத்தை நீங்கி ஸிரியாவில் (Syria) தன்னந்தனியாக ஒதுங்கி வாழ்ந்தேன். அங்கு, (உயிரைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்து) தனிமையாக மனத்தோடு போராடி, ஆசைகளை வெல்ல முயன்று மனந் தூய்மை செய்வதிலும் மறுமையை யடைதற்குத் தகுதியாகப் பண்ணுவதிலும் இரண்டு ஆண்டுகள் கழித்தேன்."

இது உண்மையும் ஊக்கமும் உடைய ஒருவருடைய மனப் போராட்டத்தை நன்கு விளக்குகின்றது.

இவ்வித எண்ணங்கள் தோன்றியவர் ஆலகசாலி யொருவர் தான் என்பதில்லை. ஆனால் தம் பயிற்சியை மற்ற யாவரிலும் நன்கு தெரிவிக்கும் சொற்கள் அவருக்குதவின. அவர் என்ன முடிவைக்கண்டு பிடிக்கின்றா ரென்றறிவோம். "முதலாவது குழந்தைப் பருவம் (கண் முதலிய புலன்களா லுணரக்கூடியவை களை யுணரும்) புலனுணர்ச்சி யொன்றே நிகழும் பருவம்; ஏழாவது வயதில் ஆரம்பிக்கும் இரண்டாவது பருவம் (அப்புலனுணர்ச்சியாலறியப் பட்டவைகளைப்) பகுத்தறியும் பருவம்; மூன்றாவது பருவம் இன்னது (பத்து மூன்றுக் கதிகமென்பதுபோல) விலக்கக்கூடாதது இன்னது விலக்கக் கூடியது இன்னது மற்ற எதன் அடிப்படையையும் வேண்டாதது என்று தெரிவதன்றி மனத்துக் கெட்டாத எல்லா உயர்ந்த பொருள்களையும் தெரியும் அறிவு நிகழும் பருவம். பருவங்கள் இம்மட்டோடு நிற்கவில்லை. இப்பருவங்களுக்குப்பின் நான்காவது பருவமொன்றுளது. அதில் (ஞானக் கண்ணாகிய) வேறொருகண் திறக்கப்பட்டு, அதனால் ஒருவன், பகுத்தறிவினா லுணர்ந்தவைகள் புலனறிவுக்குப் பொருளாகாதிருந்தது போலவும், அறிவுக்கு எட்டாதவைகளாய் (பொதுவறிவுடையவர்களாகிய) மற்றவர்களுக்கு மறைபட்டிருக்கிறவைகளாயுள்ள வருங்காலத்து நிகழும் யாவற்றையும், அறிகிறான். இதுவே 'முக்காலமுங்காணும் வலிமை.' இவ்வாறு, ஆலகசாலி (நம்முடைய ஆயுள் காலத்தில் செய்துவர வேண்டிய) வாழ்க்கை நெறிகளுக்குத் தத்துவ நூல் வழி எது கண்டு பிடித்து, மதத்தையும் தத்துவநூலையும் (ஒன்றுக் கொன்று

பொதுவாகத் தோன்றுகிறபடி, மாறுபட்டனவல்ல வென்று காட்டி) ஒற்றுமைப் படுத்துகிறார்.

அருஞ்செய்யுட் பொருட்பகுதி

[சிரபுரம் கனகசபாபதிப் பிள்ளை அவர்கள்.]

வெறிவிலக்கு (தோழிகூற்று)

இம்மை யறையனைய வேசூர மாதருமா
இம்மையுமை யிம்மையையோ என்செய்த—தம்மைமதன்
மாமாமா மாமாமா மாமாமா மாமாமா
மாமாமா மாமாமா மா.

—இராமலிங்க அடிகள்.

இச்செய்யுள் தங்கள் குமரிக்குச் சங்காதோஷம் பிடித்திருக்கின்றதெனத் தவறியுணர்ந்து பிடாரிக்குப் பலியிடவேண்டுமென்று பெற்றோர்கள் கருதியபோது தோழி உண்மையைத் தெரிவிக்கிற கூற்று.

பதவுரை

1. இம்மையல் - இந்த மயக்கங்கொண்ட, தையல் - பெண், நைய - (காம வேதனையினால்) வருந்த, சூர் - ஒரு பெண்தெய்வம் (துர்க்தேவதை), தருமா - சுகந்தருமா? (தராது என்றபடி); 2. இம் - இந்த, மை - ஆட்டுக்கிடாவானது, உமை - உங்களை, இம்மை - இப்போது (இவ்வுலகத்தில்), என்செய்தது - என்ன தீங்கு செய்தது? (நீவிர் பலியிடுவதால்), அம் - அழகிய, மை - இருண்ட, மதன் - மன்மதன்; 3-4. *அஞ்சுமா - பயப்படுவானா? ஆறுமா - சாந்தியடைவானா? எட்டுமா - (உங்கள் பெண்ணை விட்டு) எட்டி விடுவானா; அகன்றுவிடுவானா?

*பின்னிரண்டடியில் 'மா' என்னும் எழுத்து 19 தரம் படிக்கப்படுகின்றது. இதை 5 + 6 + 8 = 19 எனப் பிரித்து அஞ்சுமா, ஆறுமா, எட்டுமா என்று ஆக்கப்பட்டது. முதலடியிலுள்ள ஏ, அசை; அமா, ஆச்சரியச் சொல்.

வரலாற்றுப் பகுதி: History & Biography.

தொல்காப்பியர்

(முகப்புப் படம் பார்க்க)

[வித்வசிகாமணி. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்]

காப்பியக்குடி யென்பது சிலப்பதிகாரம் முதலிய சங்கம் மருவிய நூல்களுள்ளும் இளம்பூரணர் முதலிய ஆசிரியர் இயற்றிய உரைகளுள்ளும் காணப்படுமோர் பழம்பதி; பழைய புகார் நகரத்திற்கு ஏறக்குறைய ஒரு காவத தூரத்தில் அஃது இருத்தல் வேண்டும் என்பதைச் சங்கநூல்களால் அறியலாம். அந்நூல்களால் இக்காப்பியக்குடி தெய்வத்தன்மை பொருந்தியது என்று ஏத்திக் கூறப்படுகின்றது. சீகாழி தாலுகா அரசூர் (S. I. R.) வட்டம் மதுராவைச் சேர்ந்த பிடாகையாயிருப்பது இந்தக் காப்பியக் குடி. இந்தப் பிடாகையின் நத்தமும் நன்செய் புன்செய் நிலங்களும் பண்டைக் கோவிலும் அதைச் சேர்ந்த திருக்குளம் முதலியனவும், காழிப் பெருநிலக்கிழவர் திரு. கி. சிதம்பரநாத முதலியார் அவர்கட்குச் சொந்தமானவை. இப்பழைய கோவில் தற்போது பாழாகி இருந்த இடம் தெரியாமலிருக்கின்றதாயினும் இதன்கண் மூன்று சிவலிங்கங்கள் இன்றும் காணப்படுகின்றன. இக்கோவிலைப் புதுப்பிக்க திரு. முதலியார் அவர்கள் நோக்கங் கொண்டிருப்பது பெரிதும் போற்றற் குரியதாம்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகட்குமுன் இத்தலத்தைத் தரிசிக்க எண்ணங்கொண்டு, சிலர் அங்குச் சென்றிருக்கையில், அவ்வாலயத்திற்கு மேற்றிசையில், எச்கல் முதலியார் குடும்பத்தினரான வயது முதிர்ந்த அண்ணியார் ஒருவர் அக்கோவிலைப் பற்றிய இரண்டொரு சிறப்பியல்புகளை அவர்களுக்குத் தெரிவித்தனர். அக்கோவிலின் தென்புறத்தில் இப்போதுள்ள சிவலிங்கத்தின் பக்கலில் முகப்புப் படத்திற்கண்ட திருவுருவின் கற்சிலை யிருந்தது. இச்சிலை சின்ன முனிவர் என்றும், இவர்தம் குருவாகிய பெரிய முனிவர் சிகாழியில் இருக்கிறார் என்றும், இந்தச் சின்ன முனிவர் பெரிய முனிவரின் மனைவியாரை அழைத்து வருங்காலத்துக் குருவின் ஆணையை மீறி ஒரு கோலைப்பற்றச் செய்து அழைத்து வந்தபடியால் பெரிய முனிவரின் ஆணையால் இங்கேயே (காப்பியக் குடியிலேயே) தடைபட்டு நின்று இப்பழைய ஆச்சிரமத்தில் சிவலிங்கத்தைத் தாபித்துப் பூசித்து வருகின்றார் என்றும் அவ்வண்ணியார் கூறினார்கள். இக் கூற்றை ஆராய்ந்தால் இந்தச் சிறுமுனியே

திரணபிந்து என்னும் தொல்காப்பியனுர் என்றும், பெருமுனிவர் அகத்தியர் என்றும், அண்ணியார் கூறிய வராலாறு ஆக்கிநேயம் முதலிய புராணங்களிலும், நச்சினுர்க்கினியர் உரையிலும் கண்ட வரலாற்றுடன் ஒத்து நடப்பதொன்றென்று விளங்குமன்றே?

சோழநாட்டில் கொள்ளிடநதி முதல் அரிசிலாறு வரையில் உள்ள கீழ்ப்பக்கத்துப் பெரு வெளிகளில் எங்கு நோக்கினும் வைதிக முனிவர் திருவுருவங்களும், பௌத்தசமண முனிவர்களின் திருப்பள்ளிகளும் எண்ணிறந்தவை காணப்படுகின்றன. இந்நாட்டில் இவ்வைதிக முனிவர் வைதிக சமயங்களையும், பௌத்த சமண முனிவர் அவ்வச் சமயங்களையும் நிறுவியவர்கள் ஆவார்கள். இந்நாட்டுச் சைவத்திருக்கோயிற் புராணங்களை நோக்குங்கால் அவர்கள் அகத்தியர், துருவசு, ததீசி, கண்ணுவர், பார்க்கவர், திரணபிந்து, காச்யபர் முதலியோர் ஆவார். காச்யபர் என்றவர் வைதிக முனிவர். பார்க்கவர் என்பவரும் அன்னுரே. அவர் குடியிற் பிறந்தவர் வாழ்ந்த இடமே காப்பியக்குடி. மற்றொரு காச்யபர் பௌத்த மதாசாரியர். இவர் தெளிச்சேரி, பொன்பற்றி முதலிய இடங்களில் வாழ்ந்து காச்யபக் குடியில் (காசாக்குடி) பெரிய மடங்களை அமைத்திருந்தார். அம்மடங்கள் வீரசோழன் காலம் வரையில் இருந்து பின்னர்ச் சைவாதீனத்திற்குட்பட்டு, இப்பொழுது க்ஷீணதசையில் இருக்கின்றன. ஜமதக்கினி, ரேணுகை இவர்பால் தோன்றின ஜாமதங்கிகளாகிய தன்னுவர், அநுமர், விச்சுவாவசு, பரசுராமர், திரணபிந்து என்பாரும், பிருகுவிற்கும் கியாதிக்கும் பிறந்த பார்க்கவி (லக்ஷ்மி) பார்க்கவர் (காவ்ய கோத்திரத்தார்) என்பாரும் இப்பதிகளில் சிறப்புற்றிருந்தனர் என்பதற்குப் பல புராணவரலாறுகள் உள. காழித் திருப்பிரமபுரக் கோவிலில் நின்ற திருக்கோலமாக, பெரிய திருவுருவத்தோடு சிறு முனிவரான திரண தூமாக்நியான தொல்காப்பியருங் காணப்பட்டனர். இவர் திருமேனிகளுள் மேற்காட்டிய தொல்காப்பியர் திருவுருவமும் சீகாழியில் சண்பைப்பதியில் (அதாவது திருஞான சம்பந்தராலயத்தில்) அமைக்கப்பட்டிருந்த கிருட்டினர் சிலையும் மங்கையர்க்கரசியார் திருவுருவமும் சாஸனங்கள், புராணங்கள், ஐதிகங்கள் வாயிலாக இப்போது காணப்படுகின்றனவேயன்றி சிலையுருவங்களாக மறைந்திருக்கின்றன. பெருந் திருவினராய சைவமடாதிபதிகளும், சீகாழி முதலியார் அவர்களும், கடக்கை விநாயகநல்லூர்ப் பிள்ளையவர்களும், பிறரும் நன்முயற்சி செய்து, இப்பழைய ஆலயங்களையும், இவற்றிற்குரிய திருவுருவச் சிலைகளையும் புதுப்பித்துத் திருமயிலாடி, வைணவபுரி, காப்பியக்குடி, திருச்சிற்றம்பலம் முதலிய திருத்தலங்களின் மான்மியங்களையும் வெளியிட்டருள்வார்களாக.

சென்னை மாகாணத் தமிழர் மாநாடு

அறிக்கை 1.

நிகழும் 1934 மார்ச்மீ்க் கடைசியில் வரும் ஈஸ்டர் விடு முறையில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடொன்று திருநெல் வேலியில் கூட்டப்பெறும்.

மாநாட்டுத்தலைவர். தமிழ்ப் புரவலர் திருவாளர் த. வே. உமா மகேசுவரம்பிள்ளையவர்கள் B. A., B. L., தஞ்சை.

வரவேற்புத் தலைவர் : திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A.,M.L. தாகூர் சட்டப் பேராசிரியர்.

வரவேற்புத் துணைத்தலைவர்கள்: மறைத்திருவாளர் சாமி. விருதை. சிவஞானயோகி யவர்கள், தமிழ்ப் பிரமசூத்திர ஆசிரியர்.

திரு. M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் B. A., L. T.

அமைச்சர்கள் : திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.

வித்வான். திரு. பு. சி. புன்னைவனநாத முதலியவர் அவர்கள்.

பொருளாளர்கள் : திரு. தி. மு. சங்காலிங்கம் பிள்ளையவர்கள் B. A.

திரு. காருடை. சு. சூரியமூர்த்திப்பிள்ளையவர்கள்.

உறுப்பினர் : திரு. மா. வே. நெல்லையப்பப் பிள்ளையவர்கள் B. A. திரு. தி. சு. வள்ளிநாயகம் பிள்ளையவர்கள் B.A., திரு. முருகப் பிள்ளையவர்கள், திரு. அ. முத்தையபிள்ளையவர்கள் B A.,B.L. திரு. வள்ளல். சோ. சிவஞானதேசிகரவர்கள்.

மாநாட்டின் நோக்கம் : "சென்னை மாகாணத் தமிழர் சங்கம்" ஒன்று நிலைபெறச்செய்து அதன் வாயிலாக 1. நூல்களும் மொழி பெயர்ப்புக்களும் தனித்தமிழில் வெளிவருமாறு செய்வதும், 2. அடிக்கடி தமிழர் மாநாடுகள், தமிழ்ப் புலவர் மாநாடுகள் கூட்டித் தமிழ்மக்களிடை அறிவும் அன்பும் ஒற்று மையும் மல்கச் செய்வதும் ஆகும்.

தமிழ்ப் பெருமக்களனைவரும் வேண்டும் துணைபுரிந்து மாநாட்டைச் சிறப்பாக நடத்தித் தரும்படி வேண்டுகிறோம்.

இ. மு. சுப்பிரமணியபிள்ளை,
மாநாட்டு அமைச்சர்.

திருநெல்வேலி வசந்த மண்டபத்தில் 7-1-1934 மாலை 4 மணிக்கு, ஓய்வுபெற்ற தாசில்தார் திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள் B. A., தலைமையில் கூடிய தமிழர் பொதுக் கூட் டத்தில் நிறைவேறிய முடிபுகள் (Resolutions):—

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சென்ற 1933 டிசம்பர் 23, 24-ம் நாட்களில் கூடிய தமிழன்பர் மாநாட்டில் நிறைவேறிய முடிபுகள் வாசிக்கலாயின :—

க. "புதிய அறிவு நூல்கள் (நவீன சாஸ்திர நூல்கள்) தமிழில் எழுதப்பட்டுப் பள்ளிக்கூடங்களில் தமிழிலேயே கற்பிக்கப் படவேண்டு மென்று இம்மா (மகா) நாடு கருதுகின்றது.

உ. "பழுந்தமிழ் நூல்கள் தகுந்த ஆர்வத்துடன் (சிரத்தையுடன்) படிக்கப்பட வேண்டுமென்றும், அதில் ஊக்கும் ஏற்பாடு களைச் செய்யவேண்டு மென்றும் இம்மா (மகா) நாடு தீர்மானிக்கிறது."

ங. "இக்கால (தற்கால)ப் பள்ளிச்சிறுர்களுக்கு ஏற்றமுறையில் பழந்தமிழ் நூல்களைத் தொகுத்தும் திரட்டியும் வெளியிட வேண்டுமென இம்மா (மகா) நாடு தீர்மானிக்கிறது."

ச. "தமிழில் பல்பொருள் விளக்க நூல் ஒன்று அமைக்க (தயாரிக்க) வேண்டுமென்று இம்மா (மகா) நாடு தீர்மானிக்கிறது."

ரு. "தமிழ் உயர்தனிச் சிறப்புடைய தென்பதை உணரும்படி செய்வதற்கான முயற்சிகளைக் கையாள வேண்டு மென்றும், அரசியலார் (சர்க்கார்) தமிழ் மொழிக்கு (பாஷைக்கு) முதன்மை (பிராதான்யம்) அளிக்கவேண்டு மென்றும், தமிழாசிரியர்களை மற்ற ஆசிரியர்களின் நிலைமையில் (அந்தஸ்தில்) வைக்கவேண்டு மென்றும் இம்மா (மகா) நாடு தீர்மானிக்கிறது."

சா. S. S. L. C. வகுப்பு வரையிலாவது எல்லாப் பாடங்களையும் (ஆங்கிலத்தைத் தவிர்த்து) கட்டாயமாகவே தமிழில் கற்றுக் கொடுத்துத் தேர்வு செய்ய (பரீட்சிக்க) வேண்டு மென்று இம்மா (மகா) நாடு தீர்மானிக்கிறது."

மேலேகண்ட க, உ. ங, ச, ரு, சா ஆகிய ஆறு முடிபுகளையும் இப்போதுக் கூட்டம் ஒப்புக்கொள்கிறது."

எ. "தமிழில் தக்க சொற்கள் (பதங்கள்) இல்லாத இடத்து வழக்கத்திலுள்ள சொற்களை (பதங்களை)ப் பயன் படுத்தல் ஏற்ற தென்று (உபயோகித்தல் உசித மென்று) இம்மா (மகா) நாடு தீர்மானிக்கிறது."

இப்பேரவை இம் முடிபை மறுத்து அடியில் வருமாறு முடிவு செய்கிறது.

"மேலை நாட்டு அறிவு நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்குமிடத்து உரிய சொற்களைச் சங்கநூல் சித்தர் நூல் முதலிய பழந் தமிழ் நூலாராய்ச்சி வாயிலாகத் திரட்டியும், தமிழ்ப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு சொற்களை ஆக்கியும் தமிழ்ச் சொற்றொகுதியை வளம்படுத்த வேண்டும்."

அ. "தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 216 எழுத்துக்களில் பல எழுத்துக்கள் பயனற்றவை (உபயோக மற்றவை)யாயும், அச்சுக் கோப்பவர்களுக்கு வீண் சிரமத்தை உண்டுபண்ணுகின்றவையாயும் இருக்கின்றன. மேலும் சில ஒலி (சப்தங்)களுக்குச் சரியான எழுத்துக்களும் இல்லை. ஆதலால், வேண்டாத எழுத்துக்களை நீக்கி வேண்டிய எழுத்துக்களைச் சேர்க்க வேண்டுமென இம்மா (மகா) நாடு தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை இப்பேரவை மறுக்கின்றது.

"தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 256 (216 அல்ல) எழுத்துக்களும் பயனுடையனவே என்றும், ஒலிநூன் முறைப்படி எல்லா எழுத்தொலிகளையும் தமிழெழுத்துக்களி னுதவியைக்கொண்டே எழுதுதல் கூடுமாதலால் பிறமொழிகளினின்றும் எழுத்துக்களை எடுத்து வழங்குதல் மிகையும் பொருத்தமின்மையும் ஆகுமென்றும் இப்பேரவை முடிவு செய்கிறது."

செய்திகளும் குறிப்புகளும் (News and Notes)

இத்திங்கள் கூடிய சென்னை சட்டசபையில், தற்போது இம் மாகாணம் இருந்துவருங் கையறுநிலையை நோக்கி, குடிகளின் நிலங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிலவரி நீர்வரி முதலியவைகளில் காற்பங்கு குறைத்து விடவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட முடிவு பெரும்பான்மையான அங்கத்தினர்களால் ஒத்துக் கொள்ளப்பட்டு நிறைவேறிற்று. ஒத்துக்கொண்டவர்களின் தொகை 59; எதிர்த்தவர்களின் தொகை 21. இம்முடிபை அரசாங்கத்தாரும் ஒத்துக் கொண்டு ஏற்றது புரிவார்களென நம்புகிறோம்.

* * *

1934-ம் ஆண்டு தொடங்கும் பொழுதே கண்ணீருங் கம்பலை யுமாகத் தொடங்குமென்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. மக்கள் சீறினும் வேந்தர் சீறினும் தடுத்தோ, ஒதுங்கியோ தப்ப லாம்; தெய்வமே சீறின் நமக்கு ஆர்துணையு முண்டோ? இவ் வுண்மையைப் புலப்படுத்தக் கருதியே போலும் நிலப் பேரதிர்ச் சியால் பீஹார் மாகாணத்திலுள்ள முஸாபர்புரி, பாடலிபுரம், மாங்கீர், நேபாளத்திலுள்ள காட்மாண்டு முதலிய இடங்கள் பெரும் பாழுற்றன. பொருளிழப்பும், உயிரிழப்பும் அளவுவரை யற்று நேர்ந்துள்ளன. அவ்வூர்களின் இரங்கத்தக்க நிலையைச் செய்தித்தாள்கள் வாயிலாகப் படிப்பதே ஆருத்துயரையளிக் குமெனின் மிகைபடக் கூறல் வேண்டுமோ! இத்தருணத்தில், கடவுளருளால் அத்தகையதோர் நிலவதிர்ச்சியினின்றும் தப்பிய நந்நாட்டவர் தத்தம்மாலியன்ற பொருளுதவி செய்து தமிழ்நாட் டின் கொடைத்திறனை உலகம் புகழுமாறு விளக்குவர் என எதிர் பார்க்கிறோம்.

*　　*　　*

முக்கட் செல்வனின் அருள் பெற்றிலகும் நம் இந்தியாவிற்கு மூன்று கண்களாக விளங்குவது, பம்பாய், வங்கம், சென்னை ஆகிய மூன்று தலை மாகாணங்களேயாம். அத்தகைய தலைமை மாகாணங்களின் அரசாங்கத் தலைவர்கள் இதுகாறும் வெள் ளையர்களாகவே இருந்துவந்துள்ளனர். அவ்வாறிருக்க, நம் சென்னை மாகாணத்தின் தலைவர் பதவிக்கு, விரைவில், அரசாங்க உள்நாட்டு உறுப்பினராயிருக்கும் இந்நாட்டவராகிய ஸர் முகம் மது உஸ்மான் சாயபு அவர்கள் உயர்த்தப் படுவார்களென்று அறிந்து கழிபேருவகை யெய்துகின்றோம். அப் பெரியார் தலைவ ராக இருக்கப் போவது தற்போது அறிவிக்கப்பட்டுள்ளபடி சில திங்கள்களேயாயினும் அச்சிறுபோதிலும் தமிழ்நாட்டின் பெருமை சிறந்து விளங்குமாறு இறைவன் அருள்புரிவானாக.

*　　*　　*


சென்னையிற் கூடிய தமிழன்பர் மகாநாட்டினால் தமிழ் நாட் டில் தமிழ்மொழியின்மாட்டுப் புதியதோர் பரிவு உண்டாகியுள்ள தென்றும் அப்பரிவு வீண்போகாவாறு அதைப் பயன் படுத்திக் கொள்ளத் தமிழ்மக்கள் முன்வரவேண்டுமென்றும் சென்ற இதழிற்

குறித்திருந்தோம். அதற்கேற்ப இன்னும் இரண்டு திங்கள் களுக்குள் திருநெல்வேலியில் ஒரு பெரிய தமிழர் மாநாடு கூடுவ தற்கான முயற்சிகள் தக்கோரால் எடுக்கப்பட்டு வருகின்றன வென்பதை உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அம்மா நாட்டைக் குறித்த அறிக்கைகளை முன்னர்க் காணலாம். தமிழ் மொழிப்பற்றுடைய யாவரும் அம்மாநாட்டுக்கு ஒருங்கு திரண்டு சென்று கலந்துகொள்ளக் கோருகிறோம்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் பொன்விழா மிகச் சிறப்பாக 1933ஆ டிசம்பர்மீ 24உ முதல் மூன்று நாட்கள், சைவத் திருவாளர் பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. முதல் நாள் மாலை 3-மணிக்குத் திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பேரவையைத் திறந்து வைத்தார்கள். பின்னர்த் தலைவர் நியமனமும் வரவேற்பும் நடைபெற்றன. பிறகு தலைவரவர்கள் தமது தலைமையுரையை இலக்கியச் சுவை நிரம்பி வழியுமாறு நிகழ்த்தினார் கள். பிறகு திருவாளர்கள் அ. வரதநஞ்சைய பிள்ளை, மாணிக்கவாசக சரோஜனியம்மையார், C. K. சுப்பிரமணிய முதலியார், கே. ஆறுமுகம் பிள்ளை ஆகிய பேரறிஞர்கள் முறையே, பதியும் பசுவும், பெண்களும் சமயக் கல்வியும், ஆளுடைய பிள்ளையார் அருண்மொழிகள், கடவுள் ஒருவரே என்பனபற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

இரண்டாம் நாள் காலை திரு. மா. கிருஷ்ணபிள்ளையவர்கள் பெண் பாடசாலை மாணவிகள், மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலை நடித்தார்கள். மாலையில் திருவாளர்கள் C. K. சுப்பிரமணிய முதலியர், வ. மு. இரத்திநேசுவரையர், ம. பாலசுப்பிரமணிய முதலியார், மு. அருணா சலம் பிள்ளை, அ. வரதநஞ்சைய பிள்ளை, கே. ஆறுமுகம் பிள்ளை ஆகிய பேரறிஞர்கள், முறையே திருக்கோவையார், ஐந்தொழில் நடனம், சிவகதி விளைவு என்பன பற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

மூன்றாம் நாள் காலையில் திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள் சித்தாந்த சாத்திரம் பயிலுங்கால் மாணவர்கட்குத் தோன்றும் ஐயங்களை விளக்கித் தெளிவித்தார்கள். மாலையில் திருவளர் செல்வி மாணிக்க வாசக சரோஜனியம்மையார் தலைமையில் சைவ மங்கையர் மகாநாடும், திரு. தி. கு. கி. நாராயணசாமி நாயடு அவர்கள் தலைமையில் சைவ இளைஞர் மகாநாடும் கூடின. பல சொற்பொழிவுகளும் தீர்மானங்களும் நிறை வேறின. இரவு பத்துமணிக்குமேல் உயர்திரு - சுந்தர ஓதுவா மூர்த்தி களால் "புனிதவதியார்" என்பதுபற்றிய காலக்ஷேபம் அழகாக நடந்தது. இச்சபையினர் "சித்தாந்தப் பொன்மலர்" என்றொரு அழகிய நூலையும் வெளியிட்டார்கள். (சித்தாந்தம்)



J. C. Bose